Digitization by eGangotri-South Center

உ

சிவமயம்

நமச்சிவாயம்

கும்பகோணம் திருக்கயிலை ஆசிரியர்

சிவஸ்ரீ K.Y. சுந்தரேசக் குருக்கள் அவர்களின்

78வது ஆண்டு துவக்கவிழா மலர்

5.9.2012

விலை

உ
சிவமயம்
திருக்கயிலை
தெய்வீக மாதப்பத்திரிக்கை
கும்பகோணம்

₹.50/-

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

திருக்கயிலை
ஆசிரியர் அவர்களின்
78ம் ஆண்டு துவக்கவிழா
நல்வாழ்த்துக்கள்

"சிற்ப கலாமணி"

எஸ். தேவசேனாபதி ஸ்தபதி சன்ஸ்

தேவ. ராதாகிருஷ்ண ஸ்தபதி
தேவ. ஸ்ரீகண்ட ஸ்தபதி
தேவ. சுவாமிநாத ஸ்தபதி

ஸ்ரீ ஜெயம் இண்டஸ்ட்ரீஸ்

19/9, ராஜவீதி, சுவாமிமலை - 612 302.
தஞ்சை மாவட்டம்.

Ph : 0435 - 2454429 Resi : 2454757
Fax : 2454329
E-mail : sthapati_kmb@sanchar net.in
web : www.sthapathi.com

Chola Graphics, 0435-2433660

பஞ்சலோக சிற்ப உற்பத்தி மற்றும் ஏற்றுமதியாளர்கள்...

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

உ

காணாபத்ய அஷ்டகம்

1. ஏகதந்தம் மஹாகாயம் தப்தகாஞ்சன ஸன்னிபம்
லம்போதரம் விசாலாக்ஷம் வந்தேஹம் கணநாயகம்

2. மௌஞ்ஜீ கிருஷ்ணா ஜினதரம் நாகயக்ஞோப வீதினம்
பாலேந்து விலஸன் மௌளிம் வந்தேஹம்கணநாயகம்

3. அம்பிகா ஹ்ருதாயனந்தம் மாத்ருபி: பரிபாலிதம்
பகத்பிரியம் மதோன்மத்தம் வந்தேஹம் கணநாயகம்

4. சித்ர ரத்ன விசித்ராங்கம் ரத்னமாலா விபூஷிதம்
சித்ரரூப தரம்தேவம் வந்தேஹம் கணநாயகம்

5. கஜவக்த்ரம் ஸுரேஷட்ரஞ்ச கர்ணசாமர பூஷிதம்
பாசாங்குசதரம் தேவம் வந்தேஹம் கணநாயகம்

6. மூஷிகோத்தம மாருஹ்ய தேவாஸுர மஹா ஹவே
யோத்காமம் மஹாவீர்யம் வந்தேஹம் கணநாயகம்

7. யக்ஷகின்னர கந்தர்வ ஸித்தவித்யா தரைஸ்ததா
ஸ்தூயமானம் மஹாத்மானம் வந்தேஹம் கணநாயகம்

8. ஸர்வ விக்ன ஹரம் தேவம் ஸர்வ விக்ன விவர்ஜிதம்
ஸர்வ ஸித்தி ப்ரதாதாரம் வந்தேஹம் கணநாயகம்

நவக்கிரஹங்களில் கேது பகவானுக்கு

அதிதேவதை மஹா கணபதி. இந்த காணாபத்ய அஷ்டகத்தினை தினமும் ஒரு முறை நாம் பாராயணம் செய்து வந்தால், கேது பகவானின் உபாதைகள், கிரஹ தோஷம் அனைத்தும் நீங்கும். மஹாகணபதியின் அனுக்ரஹத்தால் கல்வி, புகழ், செல்வம் பெருகி மேன்மையடையலாம்!

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

உ

சிவலிங்காஷ்டகம்

இந்த சுலோகத்தை நாள்தோறும் இருவேளையும் பாராயணம் செய்தால் சிவபெருமான் திருவருளால் அனைத்து சிவ நலன்களையும் எளிதில் அடையலாம்.

ப்ரம்ம முராரிஸுரார்ச்சித லிங்கம்
நிர்மல பாஸித சோபித லிங்கம்
ஜன்மஜ துக்க வினாசக லிங்கம்
தத் ப்ரணமாமி ஸதாசிவ லிங்கம் | 1

தேவ முனி ப்ரவாச்சித லிங்கம்
காம தஹனா கருணாகர லிங்கம்
ராவண தர்ப்ப வினாசக லிங்கம்
தத் ப்ரணமாமி ஸதாசிவ லிங்கம் | 2

ஸர்வஸுகந்தி ஸுலேபித லிங்கம்
புத்தி விவர்த்தன காரண லிங்கம்
ஸித்த ஸுராஸுர வந்தித லிங்கம்
தத் ப்ரணமாமி ஸதாசிவ லிங்கம் | 3

தக்ஷஸு யஜ்ஞ வினாசக லிங்கம்
கனக மஹாமணி பூஷித லிங்கம்
பணிபதிவேஷ்டித சோபித லிங்கம்
தத் ப்ரணமாமி ஸதாசிவ லிங்கம் | 4

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

குங்கும சந்தன லேபித லிங்கம்
பங்கஜ ஹாஸூர சோபித லிங்கம்
ஸஞ்சித பாவ வினாசக லிங்கம்
தத் ப்ரணமாமி ஸதாசிவ லிங்கம் | 5

தேவகணார்ச்சித ஸேவித லிங்கம்
பக்த பாவஸுபாவித லிங்கம்
தினகரகோடி ப்ரபாகர லிங்கம்
தத் ப்ரணமாமி ஸதாசிவ லிங்கம் | 6

அஷ்டதளோபரி வேஷ்டித லிங்கம்
ஸர்வ ஸமுத்பவ காரண லிங்கம்
அஷ்டதரித்ர வினாசக லிங்கம்
தத் ப்ரணமாமி ஸதாசிவ லிங்கம் | 7

ஸுரகுரு ஸுரவர பூஜிதலிங்கம்
ஸுரவர புஷ்ப ஸதார்சித லிங்கம்
பராத்பரம் பரமாத்மக லிங்கம்
தத் ப்ரணமாமி ஸதாசிவ லிங்கம் | 8

உ

பஞ்சபூதத்தலங்கள்

பிருதுவி	(மண்)	:	காஞ்சீபுரம்
அப்பு	(நீர்)	:	திருவானைக்காவல்
தேயு	(நெருப்பு)	:	திருவண்ணாமலை
வாயு	(காற்று)	:	திருக்காளத்தி
ஆகாசம்	(வான்வெளி)	:	சிதம்பரம்

வேறு

பிருதுவித்தலம் – திருவாரூர் – சிவத்தன்மையுடையது
" – காஞ்சீபுரம் – சக்தித்தன்மையுடையது

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

உ

சிவ வடிவங்கள்

ஈசானம், தத்புருஷம், அகோரம், வாமதேவம், ஸத்யோஜாதம் என்னும் சிவருமானுடைய ஐந்து முகங்களிலிருந்தும், ஒருமுகத்திற்கு ஐந்து வடிவங்கள் வீதம் ஆக 25 வடிவங்கள் சிவமுஹூர்த்த வடிவங்கள் என சிவாகமங்களில் உள்ளன!

சிவன் உச்சிமுகம் - ஈசானம்

சோமாஸ்கந்தர், நடராஜர், விருஷபாரூடர்,
கல்யாணசுந்தரர், சந்திரசேகரர்

சிவன் கிழக்கு முகம் - தத்புருஷம்

பிக்ஷாடனர், காமாந்தகர், காலசம்ஹாரர்,
சலந்தரர், திரிபுரசம்ஹாரர்

சிவன் தெற்கு முகம் - அகோரம்

கஜஸம்ஹாரர், வீரபத்திரர், தக்ஷிணாமூர்த்தி,
திருநீலகண்டர், கிராதகர்

சிவன் வடக்கு முகம் - வாமதேவம்

கங்காளர், சக்ரதானர், கஜாந்திகர்,
சண்டேசானுக்ரஹர், ஏகபாதர்

சிவன் மேற்கு முகம் - சத்யோஜாதம்

இலிங்கோத்பவர், சுகாசனர், ஹரிஹரர்,
அர்த்தநாரீசர், உமாமஹேஸ்வரர்

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

உ

சிவனின் ஐந்துமுக விளக்கம்

ஈசானம்

பளிங்குநிறமுடையவர், முக்கண்களை உடையவர், ஞான சந்திரனை சடையில் அணிந்தவர், சூலம் - அபய முத்திரை ஆகியவைகளைக் கைகளில் உடையவர், அழகான தோற்றத்துடனும் பார்வதியுடனும் காணப்படுவார்!

தத்புருஷம்

பொன்னிறமுடையவர், பீதாம்பரத்தையும், உபவீதத்தையும், சடையில் இளம் பிறையையும் தரித்தவர். மாதுளங்கனி, உருத்திராக்ஷ மாலை ஆகியவற்றை கைகளில் ஏந்தி கௌரியுடன் காணப்படுபவார்!

அகோரம்

முக்கண்களையும், சடைமுடியில் சந்திரனையும், காதுகளில் குண்டலங்களையும், அகன்ற புருவம், மீசை, தாடி, கேசம், பல் ஆகியவைகளுடன் உக்கிர முகத்தினையும் கொண்டவர். சத்ருக்களை அழிப்பவர், முகில் போன்ற நிறமுள்ள கங்கையுடன் கூடியவர்.

வாமதேவம்

சிவப்பு நிறமும், வெண்மையான மாலை, சந்தனம், ஆபரணம், தலைப்பாகை, வஸ்திரம், மூன்று கண்களுடன் கணாம்பிகையுடன் கூடியவர்.

ஸத்யோஜாதம்

வெண்மை நிறத்தவர், வெண்மை மாலை, சந்தனம், உபவீதம், ஆபரணம், முக்கண், வரத அபய முத்திரை, ஜடையில் சந்திரனை தரித்தும் உமையம்பிகையுடன் கூடியவர்.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center



உ

சிவபெருமானின் சிறப்புத் தலங்கள்

ஸப்தவிடங்கத் தலங்கள்

1.	திருவாரூர்	–	வீதிவிடங்கர்	– அஜபா நடனம்
2.	திருநள்ளாறு	–	நகரவிடங்கர்	– உன்மத்த நடனம்
3.	திருநாகை	–	சுந்தரவிடங்கர்	– வீசி நடனம்
4.	திருக்காராயில்	–	ஆதிவிடங்கர்	– குக்குட நடனம்
5.	திருக்கோளிலி	–	அவனிவிடங்கர்	– பிருங்க நடனம்
6.	திருவாய்மூர்	–	நீலவிடங்கர்	– கமல நடனம்
7.	வேதாரண்யம்	–	புவனிவிடங்கர்	– ஹம்ஸபாத நடனம்

அஷ்ட வீரத்தலங்கள்

1. திருக்கண்டியூர் (தஞ்சை மாவட்டம்) பிரம்மனின் சிரம் கொய்யப்பட்ட தலம்
2. திருக்கோயிலூர் (விழுப்புரம் மாவட்டம்) அந்தகாசுரன் அழிக்கப்பட்ட தலம்
3. திருவதிகை (கடலூர் மாட்டம்) திரிபுரம் எரிக்கப்பட்ட தலம்
4. திருப்பறியலூர் (நாகை மாவட்டம்) தக்கன் சிரம் கொய்யப்பட்ட தலம்
5. திருவிற்குடி (நாகை மாவட்டம்) சலந்தராசுரன் அழிக்கப்பட்ட தலம்
6. வழுவூர் (நாகை மாவட்டம்) யானையை ஸம்ஹாரம் செய்த தலம்
7. திருக்குறுக்கை (நாகை மாவட்டம்) மன்மதன் எரிக்கப்பட்ட தலம்
8. திருக்கடவூர் (நாகை மாவட்டம்) எமனை ஸம்ஹாரம் செய்த தலம்

ஜோதிர் லிங்கத் தலங்கள்

1. கேதாரம் – இமயமலை
2. சோமநாதம் – குஜராத்
3. விச்வநாதம் – (காசி) பீகார்
4. மஹாகாளம் – மத்யப்பிரதேசம்
5. ஒங்காரேஸ்வரம் – மத்யப்பிரதேசம்
6. மல்லிகார்ஜுனம் – ஸ்ரீ சைலம்
7. வைத்தியநாதம் – மஹாராஷ்ட்ரம்
8. பீமநாதம் – மஹாராஷ்ட்ரம்
9. நாகேச்வம் – மஹாராஷ்ட்ரம்
10. திரியம்பகம் – மஹாராஷ்ட்ரம்
11. குச்மேசம் – மஹாராஷ்ட்ரம்
12. இராமேஸ்வரம் – தமிழ்நாடு

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

உ

அபிஷேகப் பொருட்களால் உண்டாகும் பலன்கள்

நல்லெண்ணை	–	பக்தி, சுகம்
மாப்பொடி	–	கடன் நீங்கும்
நெல்லிமுள்ளி	–	நோய் நீங்கும்
மஞ்சள் பொடி	–	உடல் வசீகரம்
ஜலதிரவியப்பொடி	–	ராஜவசியம்
பஞ்சாமிர்தம்	–	உடல்வலிமை
சர்க்கரை	–	பகை நீக்கம்
நெய்	–	மோக்ஷம்
தயிர்	–	மக்கட்பேறு
தேன்	–	சுபம் உண்டாகும்
கருப்பஞ்சாறு	–	ஆரோக்கியம்
எலுமிச்சம்பழம்	–	லோகவசீகரம்
நார்த்தம்பழம்	–	மிருத்யு பயம் நீங்கும்
வாழைப்பழம்	–	பயிர் விருத்தியாகும்
மாம்பழம்	–	ஞானமுண்டாகும்
மாதுளம்பழம்	–	கோபத்தைப் போக்கும்
பலாப்பழம்	–	மங்களம் உண்டாகும்
சாத்துக்குடி	–	துக்கத்தைப் போக்கும்
திராக்ஷை	–	திடமான சரீரம்
பால்	–	ஆயுள் விருத்தி
இளநீர்	–	குடும்ப நலம்
அன்னம்	–	ராஜபோகம்
ஸ்வர்ணம்	–	வைராக்கியம்
விபூதி	–	சகல செல்வம் உண்டாகும்
பன்னீர்	–	ஜனவசீகரம்
பஞ்சகவ்யம்	–	பாபங்களைப் போக்கும்
சந்தனம்	–	புஷ்டியைக் கொடுக்கும்
உஷ்ணோதகம்	–	ஸம்பத்தைக்கொடுக்கும்
சுத்த ஜலம்	–	கீர்த்தியை உண்டாகும்
சங்காபிஷேகம்	–	சகல கார்யங்கள் உண்டாகும்
ஸ்நபனாபிஷேகம்	–	ஸர்வபுண்யம் கிடைக்கும்.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

உ



பாடல்பெற்ற சிவத்தலங்கள்

1.	சோழநாட்டின் காவிரியின் வடகரையில் உள்ள தலங்கள்	- 64
2.	சோழநாட்டின் காவிரியின் தென்கரையில் உள்ள தலங்கள்	- 128
3.	மலைநாட்டுத் தலம்	- 1
4.	பாண்டிநாட்டுத் தலங்கள்	- 14
5.	துளுவநாட்டுத்தலம்	- 1
6.	கொங்கு நாட்டுத் தலங்கள்	- 7
7.	ஈழநாட்டுத் தலங்கள்	- 2
8.	தொண்டைநாட்டுத் தலங்கள்	- 33
9.	நடுநாட்டுத்தலங்கள்	- 22
10.	வடநாட்டுத் தலங்கள்	- 5
	ஆக தலங்கள்	- 277

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

உ

1. சோழநாட்டில் காவிரியின் வடகரையில் உள்ள தலங்கள் - 64

1. கோயில் (சிதம்பரம்)

மூலட்டநாதர் – நடராசர் – சிவகாமி – ஆல் – சிவகங்கை முதலிய 6 தீர்த்தம் – பொன்னம்பலம் – மூவர் பாடிய ஸ்தலம் – விழுப்புரம், திருச்சி, சேலம், தஞ்சை, மாயவரம் ஆகிய ஊர்களிலிருந்து பேருந்தில் வரலாம்.

2. திருவேட்களம்

பாசுபதேஸ்வரர் – நல்லநாயகி – மூங்கில் மரம் – கோயிலின் எதிரில் தீர்த்தம் – சம்பந்தரும், அப்பரும் பாடிய ஸ்தலம் – சிதம்பரத்திலிருந்து அண்ணாமலை பல்கலைக்கழக வளாகத்துக்குள் நேரே சென்றால் கோயிலை அடையலாம்.

3. திருநெல்வாயில் (சிவபுரி)

உச்சிநாததேஸ்வரர் – கனகாம்பிகை – நெல்லி மரம் – கோயிலின் எதிரில் தீர்த்தம் – சம்பந்தர் பாடிய ஸ்தலம் – சிதம்பரத்திலிருந்து 5 கி.மீ.

4. திருக்கழிப்பாலை

பால்வண்ணநாதர் – வேதநாயகி – வில்வமரம் – கொள்ளிட தீர்த்தம் – மூவர் பாடிய ஸ்தலம் – லிங்க வடிவம் இல்லை – தொட்டி போன்ற அமைப்பு. சிதம்பரத்திலிருந்து 5 கி.மீ. கொள்ளிடத்தில் புதைந்துவிட்ட கோயிலை சிவபுரியில் தனிக்கோயிலாக அமைத்துள்ளனர்.

5. திருநல்லூர்ப் பெருமணம் (ஆச்சாள்புரம்)

சிவலோகத்தியாகேசர்–வெண்ணீற்று உமையம்மை –மாமரம்–பஞ்சாட்சர தீர்த்தம் முதலிய 11 தீர்த்தங்கள் – சம்பந்தர் பாடிய ஸ்தலம் – காகபுஜண்டரிஷி முக்தி பெற்ற ஸ்தலம். சிதம்பரத்திலிருந்து கொள்ளிடம் வழியாக 11 கி.மீ. அப்பால் 3 கி.மீ.ல் மகேந்திரப்பள்ளி. சிதம்பரம் to மகேந்திரப்பள்ளி நகரப்பேருந்து உண்டு. கொள்ளிடத்திலிருந்து 5 கி.மீ. சிவனுக்குத் திருமணக் கோலம் நடந்த இடம்.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

6. திருமயேந்திரப்பள்ளி

திருமேனி அழகர் – வடிவாம்பாள் – கண்டமரம், சம்பந்தர் பாடிய ஸ்தலம். தாழைமரம், மகேந்திர தீர்த்தம் – சிதம்பரம் (அ) சீர்காழியி லிருந்து நகரப் பேருந்தில் வரலாம்.

7. தென் திருமுல்லைவாயில் (திருமுல்லை வாசல்)

முல்லைவனநாதர் – கோதை அம்மன் – சக்கர தீர்த்தம் – சம்பந்தர் பாடிய ஸ்தலம் – சீர்காழியிலிருந்து 11 கி.மீ.

8. திருக்கலிக்காமூர் (அன்னப்பன் பேட்டை)

சுந்தரேஸ்வரர் – சுந்தராம்பாள் – சந்திரதீர்த்தம் – சம்பந்தர் பாடிய ஸ்தலம் – சீர்காழியிலிருந்து 15 கி.மீ. பஸ் தடம் 3, 13.

9. திருச்சாய்க்காடு (சாயாவனம்)

சாயாவனேஸ்வரர் – கோஷாம்பாள் – பைஞ்சாய் மரம் – ஐராவத தீர்த்தம் – சம்பந்தரும், அப்பரும் பாடிய ஸ்தலம். காசிக்கு நிகரான ஸ்தலம். சீர்காழி to பூம்புகார் சாலையில் 13 கி.மீ. வழியல் 10 கி.மீ.ல் திருவெண்காடு உள்ளது. (வில் ஏந்திய வேலவர் சந்நிதி உள்ளது).

10. பல்லவனீச்சரம் (பூம்புகார்)

பல்லவனேசுவரர் – சௌந்தரநாயகி – மல்லிகை, புன்னை மரங்கள் – ஜான்னவி தீர்த்தம் – சம்பந்தர் பாடிய ஸ்தலம் – சீர்காழியிலிருந்து 15 கி.மீ. வழியில் 10 கி.மீ.ல் திருவெண்காடும் 13 கி.மீ.ல் சாயாவனமும் உள்ளன. மாயவரத்தில் இருந்தும் வரலாம்.

11. திருவெண்காடு

வெண்காட்டு நாதர் – பிரம வித்யா நாயகி – வில்வம், கொன்றை, ஆலமரம் – சூரிய, சந்திர, அக்னி தீர்த்தங்கள் (மூக்குளம்) மூவர் பாடிய ஸ்தலம்–இங்குள்ள ருத்ரபாதத்தில் பிதிர் கடன் செய்ய நல்லது. அகோர மூர்த்தி சன்னதி விசேஷமானது – புதன் பரிகார ஸ்தலம். சீர்காழி அல்லது வைத்தீஸ்வரன் கோயிலில் இருந்து 10 கி.மீ. மயிலாடுதுறை to மங்கைமடம் நகரப் பேருந்திலும் வரலாம்.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

12. கீழைத் திருக்காட்டுப்பள்ளி

ஆரண்ய சுந்தரேஸ்வரர் – அகிலாண்ட நாயகி – அமிர்த தீர்த்தம் – சம்பந்தர் பாடிய ஸ்தலம் – திருவெண்காட்டிலிருந்து 1 கி.மீ.

13. திருக்குருகாவூர் (வெள்ளடை)

வெள்ளடைஈசுவரர் – விசாலாட்சி – பால் கிணறு தீர்த்தம் – சம்பந்தரும், சுந்தரரும் பாடிய ஸ்தலம் – சீர்காழியிலிருந்து 7 கி.மீ.

14. சீர்காழி

பிரம்மபுரீஸ்வர் – திருநிலைநாயகி – பாரிஜாதமரம் – பிரம தீர்த்தம் முதலிய 22 தீர்த்தங்கள் – மூவர் பாடிய ஸ்தலம் – கருவறைக் கோபுரத்தில் ஏறி முதல் தளத்தில் அம்மை, அப்பரையும் 2-ம் தளத்தில் சட்டை நாதரையும் தரிசிக்கலாம். பிரளயத்தில் மூழ்காத தலம். மயிலாடுதுறை to சிதம்பரம் சாலையில் உள்ளது.

15. திருக்கோலக்கா

திருத்தாளமுடையார் – ஓசை கொடுத்த நாயகி – கொன்றை மரம் – ஆனந்த தீர்த்தம் – சம்பந்தரும், சுந்தரரும் பாடிய ஸ்தலம் – சீர்காழி கோயிலுக்கு 1 கி.மீ. மேற்கே.

16. புள்ளிருக்குவேளூர் (வைத்தீஸ்வரன் கோயில்)

வைத்தியநாதர் – தையல்நாயகி – வேப்பமரம் – சித்தாமிர்த தீர்த்தம் – சம்பந்தரும், அப்பரும் பாடியது. செவ்வாய் பரிகாரத்தலம் – சிதம்பரம் மயிலாடுதுறை சாலையில் 24 கி.மீ.

17. திருக்கண்ணார்கோயில் (குறுமாணக்குடி)

கண் ஆயிரமுடையார் – முருகுவளர்கோதை – சரக்கொன்றை மரம் – இந்திர தீர்த்தம் – சம்பந்தர் பாடிய ஸ்தலம் – கண்நோய் நீக்கும் தலம் – வைத்தீஸ்வரன் கோயிலிருந்து 3 கி.மீ. மயிலாடுதுறை to தேத்தாக்குடி பாதையில் உள்ளது.

18. திருக்கடைமுடி (கீழூர்)

கடைமுடிநாதர் – அபிராமி – கிளுவைமரம் – கருணாமிர்த தீர்த்தம் – சம்பந்தர் பாடிய ஸ்தம் – மயிலாடுதுறை to பூம்புகார் சாலையில் 10 கி.மீ.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

19. திருநின்றியூர்

மகாலட்சுமீஸ்வரர் – உலக நாயகி – விளாமரம் – லட்சுமி தீர்த்தம் – மூவர் பாடிய ஸ்தலம் – மயிலாடுதுறைக்கு அருகில் உள்ள ஆனந்த தாண்டவபுரத்திலிருந்து 3 கி.மீ.

20. திருப்புன்கூர்

சிவலோகநாதர் – சொக்கநாயகி – புங்கமரம் – கணபதி தீர்த்தம் – மூவர் பாடிய ஸ்தலம் – வைத்தீஸ்வரன் கோயிலிலிருந்து 4 கி.மீ. சீர்காழி.

21. திருநீடூர்

சோமநாதர் – வேதநாயகி – மகிழமரம் – செங்கழு நீரோடை தீர்த்தம், அப்பரும், சுந்தரரும் பாடிய ஸ்தலம் – நண்டு வழிபட்ட தலம் – பிரளயத்தில் மூழ்காத தலம். மயிலாடுதுறை to நீடூர் 5 கி.மீ.

22. திருஅன்னியூர்

ஆபத்சகாயேஸ்வரர் – பெரியநாயகி – எலுமிச்சைமரம் – வருணன் அக்கினி தீர்த்தம் – சம்பந்தரும், அப்பரும் பாடிய ஸ்தலம் – மயிலாடு துறையிலிருந்தும் கும்பகோணத்திலிருந்தும் பஸ்ஸில் வரலாம்.

23. திருவேள்விக்குடி

கல்யாணசுந்தரர் – பரிமள சுகந்த நாயகி – கௌதுகாபந்தன தீர்த்தம் – சுந்தரரும் சம்பந்தரும் பாடிய ஸ்தலம். மயிலாடுதுறை to கும்பகோணம் சாலையில் 10 கி.மீ. உள்ளது. குத்தாலத்தில் இருந்து 5 கி.மீ.ல் திருவேள்விக்குடி. திருமணஞ்சேரியிலிருந்து 1 கி.மீ.

24. திருஎதிர்கொள்பாடி (மேலைத் திருமணஞ்சேரி)

ஐராவதேஸ்வரர் – மலர்க்குழல்மாது – சுந்தரர் பாடிய ஸ்தலம் – மயிலாடுதுறையிலிருந்து குத்தாலம் வழியாக மேலத் திருமணஞ்சேரிக்கு நகரப் பேருந்து உண்டு. குத்தாலத்திலிருந்து 6 கி.மீ. 5-வது கி.மீல் வேள்விக்குடி உள்ளது.

25. திருமணஞ்சேரி (கீழைத்திருமணஞ்சேரி)

அருள்வள்ளல்நாதர் – கோகிலாம்பாள் – சப்தசாகர தீர்த்தம் – சம்பந்தரும், அப்பரும் பாடிய ஸ்தலம். இங்குள்ள கல்யாண சுந்தரர் –

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

கோகிலாம்பாள் சந்நிதியில் பூமாலை சாத்தி வழிபட திருமணத்தடை நீங்கும் ஸ்தலம். மயிலாடுதுறைலிருந்து குத்தாலம் வழியாக 16 கி.மீ. தூரத்தில் திருமணஞ்சேரி உள்ளது. குத்தாலத்திலிருந்து 8 கி.மீ. பூரம் நட்சத்திரத்தில் பிறந்தவர்கள் இங்குள்ள ராகு பகவானை வழிபட நலம் பெருகும்.

26. திருக் குறுக்கை (கொறுக்கை)

விரட்டேசுவரர் – ஞானாம்பிகை – கடுக்காய் மரம் – சூலதீர்த்தம் –அப்பர் பாடிய ஸ்தலம் –அஷ்ட வீரத்தலம் – மன்மதனை எரித்த தலம் – மயிலாடுதுறையிலிருந்து நீடூர் வழியாக மணல்மேடு செல்லும் சாலையில் 13 கி.மீ. உள்ளது.

27. திருக் கருப்பறியலூர் (தலைஞாயிறு)

குற்றம் பொறுத்தநாதர் – கோல்வளைநாயகி – கொகுடிமுல்லை மரம் – இந்திர தீர்த்தம் – சம்பந்தரும், சுந்தரரும் பாடிய ஸ்தலம் – சீர்காழி கோயிலைப் போலவே இக்கோயில் அமைந்துள்ளது. 108 மடங்கு பலன் தரும் கோயில். வைத்தீஸ்வரன் கோயிலிலிருந்து பஸ்தடம் உள்ளது.

28. திருக்குரக்கா (குரக்காவல்)

குந்தலிநாதர் – குந்தளாம்பிகை – கணபதி நதி – அப்பர் பாடிய ஸ்தலம் – அமாவாசை தோறும் யாகம் நடைபெறும் தலம் – அனுமனுக்கு அறுந்தவால் வளர்ந்த தலம் – வைத்தீஸ்வரன் கோயிலிருந்து பட்டவர்த்தி வந்து இளந்தோப்பு வந்து அப்பால் 1 கி.மீ.

29. திருவாழ்வொளிப்புத்தூர் (திருவாளப்புத்தூர்)

மாணிக்கவண்ணர் – வண்டமார் பூங்குழலி – வாகைமரம் – பிரம தீர்த்தம் சம்பந்தரும், சுந்தரரும் பாடிய ஸ்தலம். மயிலாடுதுறை – மணல்மேடு சாலையில் இத்தலம் உள்ளது. சீர்காழி – பந்தநல்லூர் பாதையில் உள்ளது.

30.திருமண்ணிப்படிக்கரை (இலுப்பைப்பட்டு)

நீலகண்டேசுவரர் – அமிர்தவல்லி – இலுப்பைமரம் – பிரம, அமிர்த தீர்த்தங்கள் – சுந்தரர் பாடிய ஸ்தலம் – குரங்குகள்இன்றும் மலர் பறித்து பூஜை செய்யும் தலம். வைத்தீஸ்வரன் கோவில் பந்தநல்லூர்ப் பாதையில்

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

திருப்புன்கூர், திருக்கருப்பறியலூர், குரக்குக்கா, திருவாளப்புத்தூர், மண்ணிப்படிக்கரை. (இலுப்பைப்பட்டு), பந்தணை நல்லூர் ஆகிய திருத்தலங்கள் உள்ளன.

31. திரு ஓமாம்புலியூர்

துயர் தீர்த்த நாதர் – பூங்கொடி நாயகி – இலந்தைமரம் – கௌரி தீர்த்தம் – அப்பரும் சம்பந்தரும் பாடிய ஸ்தலம் – புலிப்பாணி, வியாக்ரபாதர் வழிபட்ட தலம். சிவன் அம்பிகைக்கு உபதேசித்த தலம். ரேவதி நட்சத்திரத்தில் பிறந்தவர்கள் இங்குள்ள தட்சிணாமூர்த்தி சனீஸ்வரரை வழிபட நலம் பெருகும். சிதம்பரத்திலிருந்து 23 கி.மீ.ல் உள்ள காட்டுமன்னார்குடியிலிருந்து 6 கி.மீ.

32. காணாட்டுமுள்ளூர்

பதஞ்சலிநாதர் – கானார்குழலி – வெள்ளெருக்கு மரம் – சூரிய தீர்த்தம் – சுந்தரர் பாடிய ஸ்தலம் – ஓமாம்புலியூரிலிருந்து 3 கி.மீ. நாரையூர் (அ) முட்டம் வந்து போக வேண்டும்.நேரடி பஸ் கிடையாது.

33. திருநாரையூர்

சௌந்தரநாதர் – திரிபுரசுந்தரி – புன்னாகமரம் – காருண்ய தீர்த்தம் – சம்பந்தரும் அப்பரும் பாடிய ஸ்தலம் – பொல்லாப்பிள்ளையார் சந்நிதி விசேஷமானது. சிதம்பரம் – காட்டுமன்னார்குடி சாலையில் 13 கி.மீ. உள்ளது.

34. திருக்கடம்பூர்

அமிர்தகடேஸ்வரர் – சோதிமின்னம்மை – கடம்பமரம் – சக்தி தீர்த்தம் – சம்பந்தரும், அப்பரும் பாடிய ஸ்தலம் – சிதம்பரம் – காட்டுமன்னார் கோவில்வந்து எய்யனூர் சாலையில் 2 கி.மீ. ஓமாம்புலியூரிலிருந்து 6 கி.மீ.

35. திருப்பந்தணைநல்லூர்

பசுபதீஸ்வரர் – காம்பனதோளிஅம்மை – சரக்கொன்றை மரம் – சூரிய தீர்த்தம் – சம்பந்தரும், அப்பரும் பாடிய ஸ்தலம் – மயிலாடுதுறை – திருப்பனந்தாள் சாலையில் இத்தலம் உள்ளது. கும்பகோணத்திலிருந்தும் வரலாம்.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

36. திருக்கஞ்சனூர்

அக்னீஸ்வரர் – கற்பகாம்பிகை – பலாசமரம் – அக்னி, பராசர தீர்த்தங்கள் – அப்பர் பாடிய ஸ்தலம், சுக்கிரன் பரிகாரத்தலம் – கும்பகோணத்திலிருந்து 20 கி.மீ. ஆடுதுறை, குத்தாலம், சூரியனார் கோயில் திருமங்கலக்குடி வழியாக வரலாம். மயிலாடுதுறையிலிருந்தும் வரலாம்.

37. திருக்கோடிக்காவல்

கோடீஸ்வரர் – வாடிவாம்பிகை – சம்பந்தரும், அப்பரும் பாடிய தலம் – ஸ்தல மரம் கொடிப்பிரம்பு – மயிலாடுதுறையிலிருந்து குத்தாலம் வழியாக கதிராமங்கலம் செல்லும் சாலையில் இத்தலம் உள்ளது. கும்பகோணம் – கதிராமங்கலம் சாலையிலும் இத்தலம் உள்ளது.

38. திருமங்கலக்குடி

பிராணவரதேசுவரர் – மங்களநாயகி – வெள்ளெருக்கு மரம் – காவிரி நதி – சம்பந்தரும் அப்பரும் பாடிய ஸ்தலம் – திருமாங்கல்ய பலம் தரும் தலம் – கும்பகோணத்திலிருந்து 18 கி.மீ. ஆடுதுறையிலிருந்து 4 கி.மீ.

39. திருப்பனந்தாள்

தாலவனேஸ்வரர் – பெரியநாயகி – பனைமரம் – பிரமதீர்த்தம் முதலிய தீர்த்தங்கள் – சம்பந்தர் பாடிய ஸ்தலம் – கும்பகோணத்திலிருந்து 15 கி.மீ. மயிலாடுதுறையிலிருந்தும் வரலாம். ஆடுதுறையிலிருந்து 9 கி.மீ.

40. திருஆப்பாடி (திருவாய்ப்பாடி)

பாலுகந்தநாதர் – பெரியநாயகி – அத்திமரம் – அப்பர் பாடிய ஸ்தலம். கும்பகோணம் – திருப்பனந்தாள் சாலையில் (திருப்பனந்தாளுக்கு முந்திய ஸ்டாப்) வழியில் சேங்கனூர் உள்ளது. மூலவருக்கு இடதுபுறம் சண்டிகேஸ்வரர் உள்ளார்.

41. திருச்சேய்ஞலூர் (சேங்கனூர்)

சத்தியகிரீஸ்வரர் – சகிதேவி – மண்ணியாறு – சம்பந்தர் பாடிய ஸ்தலம் – சண்டிகேஸ்வரர் அவதாரத்தலம் – அர்த்தநாரீஸ்வரர் கோலம் –

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

கும்பகோணம் – திருப்பனந்தாள் சாலையில் சேங்கனூர் ஸ்டாப்பில் இறங்கி 1 கி.மீ. செல்லவும்.

42. திருந்துதேவன்குடி

கற்கடகேஸ்வரர் – அபூர்வநாயகி – சம்பந்தர் பாடிய தலம் – இவ்வூரில் குடியிருப்பு இல்லை. கடக ராசிக்காரர்கள் ஆயில்யம் நட்சத்திரக்காரர்கள் வணங்க வேண்டிய தலம். நண்டாங்கோயில் என்று அழைக்கிறார்கள். நண்டு பூஜை செய்த தலம். கும்பகோணம் – வெள்ளியங்குடி (தடம் 2) பஸ்ஸில் திருவியலூர் இறங்கி சிவன் கோவில் தாண்டி 2 கி.மீ. போனால் வயலுக்குள் ஆலயம்.

43. திருவியலூர் (திருவிசலூர்)

யோகானந்தீஸ்வரர் – சாந்த நாயகி – சடாயுதீர்த்தம் – சம்பந்தர் பாடிய ஸ்தலம் – கும்பகோணத்தில் இருந்து 6 கி.மீ.

44. திருக்கொட்டையூர்

கோடீஸ்வரர் – பந்தாடுநாயகி – கொட்டை (ஆமணக்குச் செடி) – அமுத தீர்த்தம் – அப்பர் பாடிய ஸ்தலம் – கோடி மடங்கு பலன் தரும் தலம். ஏரகச் சித்தர் வழிபட்ட தலம் – கும்பகோணம் – சுவாமிமலை சாலையில் 4 கி.மீ.ல் கொட்டையூர்

45. திருஇன்னம்பர் (இன்னம்பூர்)

எழுந்தறிநாதர் – சுகந்த குந்தளாம்பிகை – பலா, சண்பக மரங்கள் ஐராவத தீர்த்தம் – சம்பந்தரும், அப்பரும் பாடிய ஸ்தலம் – கும்பகோணம் புளியஞ்சேரி வழியாக சுவாமிமலை சாலையில் 7 கி.மீ.ல் இன்னம்பூர் அப்பால் 3 கி.மீ.ல் திருப்புறம்பயம்.

46. திருப்புறம்பயம்

சாட்சிநாதேஸ்வர் – கரும்பன்னசெல்வி – புன்னைமரம் – பிரமதீர்த்தம் – மூவர் பாடிய ஸ்தலம் – கோயிலுக்கு முன்னர் உள்ள குருபகவான் சந்நிதி விசேஷமானது. விநாயகருக்கு அபிஷேகித்த தேன் உறிஞ்சப்படுகிறது. கும்பகோணம் – புளியஞ்சேரி வழியாக 10 கி.மீ.ல் திருப்புறம்பயம் வழியில் 7 கி.மீ.ல் இன்னம்பூர்.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

47. திருவிஜயமங்கை

விஜயநாதர் – மங்களாம்பிகை – அருச்சுண தீர்த்தம் – சம்பந்தரும், அப்பரும் பாடிய ஸ்தலம். கும்பகோணத்திலிருந்து சுவாமிமலை வழியாக நகரப் பேருந்து மூலம் திருவைகாவூரை அடைந்து அப்பால் 2 கி.மீ. செல்லவும்.

48. திருவைகாவூர்

வில்வவனேஸ்வரர் – சர்வஜனரட்சகி – எமதீர்த்தம் – வில்வமரம் – சம்பந்தர் பாடிய ஸ்தலம். இவ்வூரில் துர்மரணம் ஏற்படுவதில்லை. கும்பகோணத் திலிருந்து சுவாமிமலை வழியாக 15 கி.மீ. தூரம் பஸ் தடம் 6,8,65. மகா சிவராத்ரி விசேஷமாக கொண்டாடப்படுகிறது.

49. திருவடகுரங்காடுதுறை (ஆடுதுறை பெருமாள் கோயில்)

தயாநிதி நாதர் – அழகுசடைமுடி அம்மை – தென்னைமரம் – சம்பந்தர் பாடிய ஸ்தலம். கும்பகோணத்திலிருந்து சுவாமிமலை வழியாக திருவையாறுக்குச் செல்லும் சாலையில் திருவையாற்றிலிருந்து 10 கி.மீ. கும்பகோணத்திலிருந்து 20 கி.மீ.

50. திருப்பழனம்

ஆபத்சகாயர் – பெரியநாயகி – வாழைமரம் – சம்பந்தர், அப்பர் பாடியது – திருவையாறு கும்பகோணம் பாதையில் உள்ளது. ஸப்த ஸ்தான ஸ்தலங்களில் ஒன்று.

51. திருவையாறு

ஐயாறப்பர் – அறம் வளர்த்த நாயகி – வில்வமரம் – சூரிய தீர்த்தம் – மூவர் பாடியது. அகப்பைச் சித்தர் சமாதி உண்டு. தட்சிணாமூர்த்தி சந்நிதி எதிரே தியானிக்க மிகுந்த பலன் உண்டு. உத்திரட்டாதி நட்சத்திரத்தில் பிறந்தவர்கள் இங்குள்ள தட்சிணாமூர்த்தி சனீஸ்வரரை வழிபட நலம் பெருகும். சத்குரு தியாகராஜ சுவாமி முத்தி ஸ்தலம். நந்தீஸ்வரர் அவதார ஸ்தலம். தஞ்சாவூரிலிருந்து 11 கி.மீ. சப்தஸ்தானத்தலம்.

52. திருநெய்த்தானம் (தில்லை ஸ்தானம்)

நெய்யாடியப்பர் – பாலாம்பிகை – சம்பந்தரும், அப்பரும் பாடிய ஸ்தலம் – தட்சிணாமூர்த்தி நின்ற திருக்கோலம். திருவையாறு – திருக்காட்டுப்பள்ளி பாதையில் 2 கி.மீ.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

53. திருப்பெரும்புலியூர்

வியாக்ரபுரீஸ்வரர் – சௌந்தரநாயகி – சம்பந்தர் பாடிய ஸ்தலம் – நவக்கிரக சந்நிதியில் எல்லா உருவங்களும் நடுவில் உள்ள சூரியனைப் பார்த்தவாறே உள்ளன. திருவையாற்றிலிருந்து 4 கி.மீ. வழியில் 2 கி.மீ.ல் திருநெய்த்தானம் உள்ளது.

54. திருமழபாடி

வைத்தியநாத சுவாமி – பாலாம்பிகை – பனைமரம் – இலட்சுமி தீர்த்தம் – மூவர் பாடிய ஸ்தலம். திருவையாற்றிலிருந்து 5 கி.மீ. பஸ் உண்டு. திருச்சி – அரியலூர் பாதையில் உள்ளது. பஸ் தடம் எண் 2. கொள்ளிடக்கரையில் உள்ளது.

55. திருப் பழுவூர் (கீழப்பழுவூர்)

ஆலந்துறைநாதர் – அருந்தவ நாயகி – ஆலமரம் – பிரம தீர்த்தம் – சம்பந்தர் பாடிய ஸ்தலம். திருவையாற்றிலிருந்து 15 கி.மீ. அரியலூர் – திருச்சி சாலையில் 11 கி.மீ. பரசுராமர் தன் தாயைக் கொன்ற பழி தீர வழிபட்ட தலம்.

56. திருக்கானூர் (மணல்மேடு)

கரும்பேஸ்வரர் – சிவலோகநாயகி – சம்பந்தரும், அப்பரும் பாடிய ஸ்தலம் – திருவையாறு – கல்லணைப் பாதையில் கிருஷ்ணம் பேட்டை அடைந்து 3 கி.மீ. தூரம் (சைக்கிளில் (அ) நடந்து செல்லவும்)

57. திருஅன்பிலாந்துறை (அன்பில்)

சந்தியவாகீஸ்வரர் – சௌந்திரநாயகி – ஆலமரம் – சந்திரதீர்த்தம் – சம்பந்தரும் அப்பரும் பாடிய ஸ்தலம். லால்குடியிலிருந்த 5 கி.மீ. திருச்சி – சத்திரம் பஸ் நிலையத்திலிருந்தும் வரலாம். லால்குடிக்கு கிழக்கே 2 கி.மீ.

58. திருமாந்துரை (வடகரைமாந்துறை)

ஆம்ரவனேஸ்வரர் – அழகம்மை – மாமரம் (ஆம்ரமரம்) – காயத்ரி நதி – சம்பந்தர் பாடியது – லால்குடியிலிருந்து 5 கி.மீ.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

59. திருபாற்றுத்துறை [திருப்பாலத்துறை]

ஆதிமூலநாதர் – மேகலாம்பிகை – வில்வமரம் – கொள்ளிடநதி – சம்பந்தர் பாடிய ஸ்தலம் – திருச்சி வழி திருவானைக்காவல் – கல்லணை பாதையில் பனையபுரம் ஸ்டாப்பில் இறங்கி 1 கி.மீ. நடக்கவும்.

60. திருஆனைக்கா [திருவானைக்காவல்]

ஜம்புகேஸ்வரர் – அகிலாண்டேஸ்வரி – வெள்ளை நாவல் மரம் – மூவர் பாடிய ஸ்தலம் – நீர்த்தலம் – சுவாதி நட்சத்திரத்தில் பிறந்தவர்கள் இங்குள்ள சனீஸ்வரரை வழிபட நலம் பெருகும். கருவறையில் நீர் நிரம்பி உள்ளது. திருச்சி மாநகரின் ஒரு பகுதி.

61. திருப்பைஞ்ஜீலி

நீலகண்டர் – நீலநெடுங்கண்ணி – வாழைமரம் – அப்பர் தீர்த்தம் – மூவர் பாடிய ஸ்தலம் – திருமணத்தடை, தாரா தோஷம் நீக்கும் தலம். திருச்சியிலிருந்து 15 கி.மீ.ல் உள்ள மண்ணச்சநல்லூரிலிருந்து 2 கி.மீ. முசிறியிலிருந்தும் வரலாம்.

62. திருப்பாலாச்சிரமம் [திருவாசி]

மாற்றறிவரதர் – பாலாம்பிகை – வன்னிமரம் – சிலம்பாறு தீர்த்தம் – சம்பந்தர், அப்பர் பாடிய ஸ்தலம் – நடராசர் திருவடியில் முயலகனுக்குப் பதிலாக பாம்பு உள்ளது. திருச்சி முசிறி பாதையில் 12 கி.மீ. திரு ஆனைக்காவலில் இருந்து 6 கி.மீ. பிஷ்ஷாண்டார் கோயிலிலிருந்து 5 கி.மீ.

63. திருஈங்கோய்மலை

மரகதாலேஸ்வரர்– மரகதவல்லி – சம்பந்தர் பாடிய ஸ்தலம். மலைக்கோயில் 500 படிகள். குளித்தலையிலிருந்து 3 கி.மீ.ல் கடம்பத் துறையை அடைந்து அப்பால் 2 கி.மீ.முறிசியிலிருந்து 4 கி.மீ.

64. திருக்கிளியன்னவூர்

அகத்தீஸ்வரர், அகிலாண்டேஸ்வரி – சம்பந்தர்பாடியது. பாண்டி – திண்டிவனம் மார்க்கத்தில், பாண்டியிலிருந்து 25 கி.மீ. தொலைவில் உள்ளது.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

உ

2. சோழநாட்டில் காவிரியின் தென்கரையில் உள்ள தலங்கள் - 128

1. திருவாட்போக்கி (ஐயர்மலை)

ரத்தினகிரீசர் – கரும்பார் குழலி – காவேரி. அப்பர் பாடிய ஸ்தலம் – மலைக்கோயில் – 1140 படிகள் குளித்தலை – மணப்பாறை சாலையில் 10 கி.மீ.

2. திருக்கடம்பந்துறை (கடம்பர்கோயில்)

கடம்பவனேஸ்வரர் – முற்றிலாமுலை அம்மை – கடம்பமரம் – காவிரி – அப்பர் பாடிய ஸ்தலம். காசியைப் போல வடக்கு நோக்கிய கோயில் – திருச்சியிலிருந்து 40 கி.மீ. தூரமுள்ளது. குளித்தலையிலிருந்து 2 கி.மீ.

3. திருப்பராய்த்துறை

தாருகாவனேஸ்வரர் – பொன்மயிலாள்–பராய் மரம் – காவிரி – சம்பந்தரும், அப்பரும் பாடியஸ்தலம் – பராய்மரத்து இலைகளுக்கு தோல் வியாதி, பூச்சிக்கடிகளை தீர்க்கும் சக்தி உண்டு. திருச்சி – குளித்தலை சாலையில் 10 கி.மீ.

4. திருக்கற்குடி (உய்யக் கொண்டான்மலை)

உஜ்ஜீவநாதர் – பாலாம்பிகை – வில்வ மரம் – நாற்கோணக்கிணறு முதலிய 5 தீர்த்தங்கள் – மூவர் பாடிய ஸ்தலம் – மலைக்கோயில்கிரிவலம் விசேஷமானது – திருச்சியிலிருந்து 4 கி.மீ. சத்திரம் பஸ் நிலையத்தி லிருந்து வரலாம். அடிக்கடி பஸ் உண்டு.

5. திருமுக்கீச்சுரம் (உறையூர்)

பஞ்சவர்ணேஸ்வரர் – காந்திமதி – வில்வமரம் – சிவதீர்த்தம் – சம்பந்தர் பாடிய ஸ்தலம் – சத்திரம் பஸ் நிலையத்திலிருந்து வரலாம்.

6. திருச்சிராப்பள்ளி

தாயுமானவர் – மட்டுவார் குழலி – காவிரி நதி – சம்பந்தரும், அப்பரும் பாடிய ஸ்தலம். தட்சிண கயிலாயம்.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

7. திருஎறும்பியூர் (திருவெறும்பூர்)

எறும்பீஸ்வரர் – நறுங்குழல் நாயகி – வில்வமரம் – பிரம தீர்த்தம் - அப்பர் பாடிய ஸ்தலம். லிங்கம் சாய்ந்த நிலையில் உள்ளது. மலைக்கோயில் – திருச்சி – தஞ்சாவூர் சாலையில் 120 படிகள்.

8. திருநெடுங்களம்

நித்தியசுந்தரேஸ்வரர் – ஒப்பிலாநாயகி – வில்வமரம் – அகத்திய, சுந்தர தீர்த்தங்கள் – சம்பந்தர் பாடிய ஸ்தலம். திருச்சி சத்திரம் பஸ் நிலையத்திலிருந்து நகரப் பேருந்து உண்டு. ஆடி சுவாதி சுந்தரர் குருபூஜை விசேஷமானது.

9. மேலைத் திருக்காட்டுப்பள்ளி

தீயாடியப்பர் – அழகம்மை – வன்னி வில்வ மரங்கள் – அக்கினி தீர்த்தம் – சம்பந்தரும், அப்பரும் பாடிய ஸ்தலம் – திருவையாறு (அ) கண்டியூரில் இருந்து 16 கி.மீ. கும்பகோணத்திலிருந்தும் வரலாம்.

10. திருஆலம்பொழில்

ஆத்மநாதர் – ஞானாம்பிகை – ஆலமரம் – அப்பர் பாடிய ஸ்தலம் - தஞ்சாவூர் வழி கண்டியூர் திருக்காட்டுப்பள்ளி சாலையில் 5 கி.மீ.

11. திருப்பூந்துருத்தி

பூவணநாதர் – சௌந்திரநாயகி – வில்வமரம் – அப்பர் பாடிய ஸ்தலம் – சம்பந்தரின் பல்லக்கை அப்பர் சுமந்த ஸ்தலம் – சூரிய தீர்த்தம். வீணையுடன் தட்சிணாமூர்த்தி, ஒற்றைக் காலில் தவம். துர்க்கை சந்நிதிகள் விசேஷமானவை. கண்டியூர் – திருக்காட்டுப்பள்ளி சாலையில் 8 கி.மீ. உள்ளது.

12. திருக்கண்டியூர்

பிரமசிரக்கண்டீஸ்வரர் – மங்களநாயகி – வில்வமரம் – நந்தி, தட்ச, பிரம தீர்த்தங்கள் – சம்பந்தரும், அப்பரும் பாடிய ஸ்தலம் – பிரம்மாவின் தலையை சிவன் கொய்த அஷ்ட வீரத்தலம் – பிரம்மா சந்நிதி உள்ளது. தஞ்சாவூர் – திருவையாறு சாலை 9 கி.மீ. திருவையாற்றிலிருந்த 3 கி.மீ.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

13. திருச்சோற்றுத்துறை

திருச்சோற்றுத்துறைநாதர் – அன்னபூரணி – காவிரி நிதி. மூவர் பாடிய ஸ்தலம் – கண்டியூருக்கு கிழக்கில் 3 கி.மீ. திருவையாற்றில் இருந்தும் வரலாம். தஞ்சாவூரிலிருந்து 12 கி.மீ.

14. திருவேதிகுடி

வேதபுரீசுவரர் – மங்கையர்க்கரசி – வில்வமரம் – வேததீர்த்தம் – சம்பந்தரும், அப்பரும் பாடிய ஸ்தலம் – கண்டியூரிலிருந்து 3 கி.மீ.

15. திருத்தென்குடித்திட்டை [திட்டை]

பசுபதி ஈஸ்வரர் – உலகநாயகி – சண்பக மரம் – சூல (சக்கர) தீர்த்தம் – சம்பந்தர் பாடிய ஸ்தலம். குருபகவான் பரிகாரத் தலம் – மூலவர் மீது 20 நிமிடங்களுக்கு ஒருமுறை ஒரு சொட்டு நீர் விழுவதை இன்றும் பார்க்கலாம். தஞ்சாவூர் to மெலட்டூர் பஸ்சில் வரலாம்.

16. திருப்புள்ளமங்கை [பசுபதி கோயில்]

ஆலம் தரித்த நாதர் – அல்லியங்கோதை – திருக்குளம் – சம்பந்தர் பாடிய ஸ்தம். தஞ்சையிலிருந்து அய்யம்பேட்டை வந்து 1 கி.மீ. தொலைவில் உள்ள ராமர் படக்கடை ஸ்டாப்பில் இறங்கவும்.

17. திருச்சக்கராப்பள்ளி [ராசகிரி அய்யம்பேட்டை]

சக்கரவாள ஈஸ்வரர் – வேதநாயகி – சம்பந்தர் பாடிய ஸ்தலம் – தஞ்சாவூர் – கும்பகோணம் சாலையில் பசுபதி கோயிலை அடுத்து உள்ளது.

18. திருக்கருகாவூர்

முல்லைவன நாதர் – கரு காத்த நாயகி – முல்லைக் கொடி – பால், பிரமதீர்த்தங்கள். சம்பந்தரும் அப்பரும் பாடிய ஸ்தலம் – இத்தலத்தை வழிபடுவோர்க்கு குறைப்பிரசவம் ஏற்படுவதில்லை. கருவுடன் மரணம் அடைவோரும் இல்லை. அம்பாள் திருவடியில் நெய் அபிஷேகம் செய்து உண்டால் குழந்தை பிறக்கும் – கும்பகோணம் – மிலட்டூர் வழி – தஞ்சாவூர் சாலையில் உள்ளது. அய்யம்பேட்டையிலிருந்து 6 கி.மீ.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

19 திருப்பாலைத்துறை (பாபநாசம்)

பாலைவனநாதர் – தவள வெண்ணகை – பாலை மரம் – வசிஷ்ட, இந்திர, எம தீர்த்தங்கள் – அருகில் பாபநாசத்தில் ராமர் பிரதிஷ்டை செய்த 108 லிங்கங்கள் உள்ளன. தஞ்சாவூர் – கும்பகோணம் சாலையில் பாபநாசம் 26 கி.மீ.

20. திருநல்லூர்

பஞ்சவர்ணேஸ்வரர் – கிரிசுந்தரி – வில்வமரம் – சப்தசாகர தீர்த்தம் – சம்பந்தரும், அப்பரும் பாடிய ஸ்தலம் – கும்பகோணம் – சுவாமிமலை வழியாக சுந்தரப்பெருமாள்கோவில் வந்து அப்பால் 3 கி.மீ. (வாழைப்பழக்கடை ஸ்டாப்பில் இறங்கி 1 கி.மீ. நடக்கவும்). தஞ்சாவூர் – திருவாரூர் சாலையில் நல்லூர் ஸ்டாப்பில் இறங்கி 1 கி.மீ. நடக்கவும்.

21. திருஆவூர்ப்பசுபதீச்சரம்

பசுபதீஸ்வரர் – பங்கஜவல்லி – மங்களாம்பிகை – அரசமரம் – பிரம, தேனு தீர்த்தம் – சம்பந்தர் பாடிய ஸ்தலம் – கும்பகோணத்திலிருந்து 12 கி.மீ. வழியில் 6வது கி.மீ.ல் பட்டீஸ்வரம் உள்ளது. 5 பைரவர்கள் சந்நிதி இங்கு உண்டு.

22. திருச்சக்தி முற்றம்

சக்திவனநாதர் – பெரியநாயகி – சூல தீர்த்தம் – அப்பர் பாடிய ஸ்தலம் – பராசக்தி சுவாமியைத் தழுவி முத்தம் கொடுத்த உருவத்தைத் தரிசிப்போருக்கு திருமணத்தடைகள், குடும்பச் சச்சரவுகள் நீங்கும். அடுத்த வீதியில் பட்டீச்சரம் உள்ளது. கும்பகோணம் – ஆவூர் சாலையில் 6 கி.மீ.

23. திருப்பட்டீச்சரம்

பட்டீஸ்வரநாதர் – ஞானம்பிகை – வன்னி மரம் – ராமர் தீர்த்தம் – சம்பந்தர் பாடிய ஸ்தலம். துர்க்கையும் – பைரவரும் சிறப்புடையவர்கள். ஸ்ரீ ராமர் வழிபட்ட ஸ்தலம். கும்பகோணம் – ஆவூர் சாலையில் 6 கி.மீ.

24. திருப்பழையாறை (2 கோயில்கள்)

1. வடதளி: தர்மபுரீஸ்வரர் – விமலநாயகி – விக்கிரங்கள் மட்டும் தான் கோயிலில் உள்ளன. பட்டீஸ்வரத்திலிருந்து 2 கி.மீ. அப்பர் பாடியது.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

2. பழையாறை: சோமேசர் – சோமகலாம்பிகை – நெல்லிமரம் – சோமதீர்த்தம் – அப்பர் பாடிய ஸ்தலம். கும்பகோணம் – ஆவூர் வழி – முழையூர் சென்று இத்தலத்தை அடையலாம். முழையூர் – வைப்புத்தலம். பட்டீஸ்வரத்திலிருந்து 2 கி.மீ.

25. திருவலஞ்சுழி

வலஞ்சுழிநாதர் (சுபர்தீஸ்வரர்) – பெரியநாயகி – ஜடா தீர்த்தம் – வில்வமரம் – அப்பர் பாடிய ஸ்தலம் – கடல் நுரையால் ஆன வெள்ளைப் பிள்ளையார் வலஞ்சுழி விநாயகர் விசேஷமானவர். 54 லிங்கங்கள் – ஏரகச் சித்தர் வழிபட்ட தலம். அஷ்ட புஜ காளி, பைரவர் சிறப்புடையவர். கும்பகோணம் – தஞ்சாவூர் சாலையில் 6 கி.மீ. மிக அருகில் சுவாமிமலை.

26. குடமூக்கு (கும்பகோணம்)

கும்பேசுவரர் – மங்களாம்பிகை – வன்னிமரம் – மகாமகத்தீர்த்தம் – சம்பந்தரும், அப்பரும்பாடிய ஸ்தலம். அகத்தியர் சமாதி இங்கு உள்ளது. திருச்சி, தஞ்சாவூர், மயிலாடுதுறையில் இருந்தும் வரலாம்.

27. திருக்குடந்தைக் கீழ்க்கோட்டம் (நாகேஸ்வரர் கோயில்)

நாகேஸ்வரர் – பெரியநாயகி – அப்பர் பாடிய ஸ்தலம் – நாகதோஷ பரிகாரத் தலம் – ஸ்ரீ மாரியம்மன் சந்நிதியும் உள்ளது. கும்பகோணம் நகரத்தில் இருக்கிறது.

28. குடந்தைக் காரோணம் (2 ஸ்தலங்கள்)

1. சோமேசர் – சோமசுந்தரி – சோம தீர்த்தம் – சம்பந்தர் பாடிய ஸ்தலம் – கும்பகோணத்தில் நாகேஸ்வரர் கோயில் மேல்புறம் உள்ளது.

2. காசி விஸ்வநாதர் கோயில் விசுவநாதர் – விசாலாட்சி – சம்பந்தர் பாடிய ஸ்தலம் – மகாமகக் குளத்தின் வடகரையில் உள்ளது.

29. திருநாகேஸ்வரம்

நாகநாதர் – குன்றமுலைநாயகி – சண்பகமரம் – சூரிய தீர்த்தம் – மூவர் பாடிய ஸ்தலம் – ராகு பகவான் பரிகாரத் தலம். ராகுபகவானுக்கு பால் அபிஷேகம் செய்யும் போது பால் நீல நிறமாகிறது. கும்பகோணத்திலிருந்து 6 கி.மீ. ரோகிணி நட்சத்திரத்தில் பிறந்தவர்கள் நாகநாதரை வணங்குதல் நல்லது.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

30. திருவிடைமருதூர்

மகாலிங்கேஸ்வரர் – பெருநலமுலையம்மை – மருதமரம் – காருண்ய அமிர்த தீர்த்தம் – மூவர் பாடிய ஸ்தலம் – அனுஷம் நட்சத்திரத்தில் பிறந்தவர்கள் மூகாம்பிகையை வழிபட நலம் பெருகும். கும்பகோணத்திலிருந்து 7 கி.மீ.

31. திருத்தென்குரங்காடுதுறை (ஆடுதுறை)

ஆபத்சகாயேசுவரர் – பவளக்கொடி அம்மை – காவிரி – அப்பர் பாடிய ஸ்தலம் – கும்பகோணம் – மயிலாடுதுறை சாலையில் 11 கி.மீ.

32. திருநீலக்குடி (தென்னலக்குடி)

மானோக்யநாதர் – அனுபமஸ்தனி – பக்தாபீஷ்டதாயினி – பஞ்ச வில்வமரம் – தேவி தீர்த்தம் முதலிய 5 தீர்த்தங்கள் – அப்பர் பாடிய ஸ்தலம் – மரணபயம். நாகதோஷ நிவர்த்திக்கான பிரார்த்தனைத் தலம். சிவலிங்கத்திற்கு எண்ணெய் அபிஷேகம் செய்யும் போது எண்ணெயை உறிஞ்சும் தலம். கும்பகோணம் – காரைக்கால் பாதையில் 15 கி.மீ.

33. திருவைகல்மாடக்கோயில் (வைகல்)

வைகல்நாதர் – கொம்பில் இளங்கோதை – பிர்மபுரநாதர் – பெரியநாயகி, காசிவிஸ்வநாதர் – விசாலாட்சி ஆகிய மூன்று கோயில்கள் உள்ளன. முக்கண் அமைப்பில் கோயில் இருக்கிறது. சம்பந்தர் பாடிய ஸ்தலம் – ஆடுதுறையிலிருந்து 3 கி.மீ. வைகல் கோயிலும் மாடக்கோயிலும் தனித்தனியாக உள்ளன.

34. திருநல்லம் (கோனேரிராஜபுரம்)

உமாமகேஸ்வரர் – தேகசௌந்தரி – அரசமரம் – பிரமதீர்த்தம் – சம்பந்தரும், அப்பரும் பாடிய ஸ்தலம். நடராஜர் பெரிய உருவம். கும்பகோணத்திலிருந்து பஸ் தடம் 22, 46-ல் கோனேரிராஜபுரம் பிரிவில் இறங்கி நடந்தால் ஆலயம். ஆடுதுறை வடமட்டம் பஸ்சில் வரலாம்.

35. திருக்கோழம்பம் (சோழபுரம்)

கோகிலேசுவரர் – சௌந்திரநாயகி – சம்பந்தரும், அப்பரும் பாடிய ஸ்தலம் – கும்பகோணம் – கோமல் பாதையில் மல்லார்பேட்டையில் இறங்கி 1 கி.மீ. நடக்கவும். பஸ் தடம் 23.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

36. திருவாவடுதுறை

மாசிலாமணிநாதர் – ஒப்பிலாமுலை அம்மை – படர் அரசு – கோமுக்தி, பத்ம கைவல்ய தீர்த்தங்கள் – மூவர் பாடிய ஸ்தலம் – இங்கு நவக்கிரஹம் இல்லை. திருமாளிகைத் தேவர், திருமூலர் சமாதிகள் உள்ளன. கும்பகோணத்திலிருந்து பஸ் தடம் 33-ல் வரலாம். கும்பகோணம் – மயிலாடுதுறை பாதையில் திருவாலங்காட்டில் இறங்கி நடந்து போகலாம். திருவாவடுதுறை ஆதீனத்திற்கு உட்பட்ட கோயில்.

37. திருத்துருத்தி (குத்தாலம்)

உக்தவேதேஸ்வரர் – அரும்பன்னவளமுலை நாயகி – வடகுளம், சுந்தர தீர்த்தங்கள் – உத்தாலமரம் (அத்தியில் ஒரு வகை) மூவர் பாடிய ஸ்தலம் – மயிலாடுதுறையிலிருந்து 8 கி.மீ. கும்பகோணத்திலிருந்து 25 கி.மீ.

38. திருவழுந்தூர் (தேரழுந்தூர்)

வேதபுரீசுவரர் – சௌந்தராம்பிகை – சந்தன மரம் – வேதசித்தாமிர்த தீர்த்தம் – சம்பந்தர் பாடிய ஸ்தலம் – கம்பர் நினைவாலயம் உள்ளது. மயிலாடுதுறையிலிருந்து 12 கி.மீ. பஸ் தடம் 10. நகரப்பேருந்து உண்டு. குத்தாலத்திலிருந்து 4 கி.மீ.

39. திருமயிலாடுதுறை

மயூரநாதர் – அபயாம்பிகை – மா, வன்னி மரங்கள் – பிரம, ரிஷப தீர்த்தங்கள் – சம்பந்தரும் அப்பரும் பாடிய ஸ்தலம். இவ்வூரின் ஒருபகுதியான தருமபுரத்தில் தருமை ஆதீனம் உள்ளது. வள்ளலார் கோயில் காவிரி வடகரையில் இருக்கிறது. இங்கு நந்தி மீது அமர்ந்து மேதாதட்சிணாமூர்த்தி ரிஷப தேவருக்கு உபதேசிக்கின்ற திருக்கோலம் உள்ளது. குருபகவான் பரிகாரத் தலம். கும்பகோணம் – சிதம்பரம் சாலையில் 36 கி.மீ.ல் உள்ளது.

40. திருவிளநகர்

துறைகாட்டும் வள்ளல் – வேயுறுதோளி அம்மை – மெய்ஞ்ஞானத் தீர்த்தம் – சம்பந்தர் பாடிய ஸ்தலம் – மயிலாடுதுறை – பொறையாறு சாலையில் 5 கி.மீ. தூரம்.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

41. திருப்பறியலூர் (கீழப்பரசலூர்)

வீரட்டேஸ்வரர் – இளங்கொம்பனையாள் – வில்வம், பலா மரங்கள் – உத்தரவேதி தீர்த்தம் – சம்பந்தர் பாடிய ஸ்தலம். அஷ்ட வீரத்தலம் – மயிலாடுதுறை பொறையாறு சாலையில் 10 கி.மீ.ல் உள்ள செம்பொன்னார் கோயிலை அடைந்து அப்பால் 2 கி.மீ. மினி பஸ்ஸில் செல்லவும்.

42. திருச்செம்பொன்பள்ளி (செம்பனார் கோயில்)

சொர்ணபுரீஸ்வரர் – மருவார்குழலி – சூரிய தீர்த்தம் – வன்னி, வில்வ மரங்கள் – சம்பந்தரும் அப்பரும் பாடிய ஸ்தலம். மயிலாடுதுறை – பொறையாறு சாலையில் 10வது கி.மீல் செம்பொன்னார் கோயில் உள்ளது. வழியில் 6வது கி.மீ. விளநகர்.

43. திருநனிப்பள்ளி (புஞ்சை)

நற்றுணைப்பர் – மலையான்மடந்தை – சொர்ண தீர்த்தம் – மூவர் பாடிய ஸ்தலம் –இங்குள்ள கோடி வட்டம் கட்டிட வேலைப்பாடு சிறப்பு உடையது. செம்பொன்னார் கோயிலிலிருந்து 2 கி.மீ.

44. திருவலம்புரம் (மேலப் பெரும்பள்ளம்)

வலம்புரநாதர் – வடுவகிர்க்கண்ணி – பனைமரம் – பிரம, லட்சுமி தீர்த்தங்கள் – மூவர் பாடிய ஸ்தலம் – ஏரகச் சித்தர் வழிபட்ட தலம் – சீர்காழி – திருவெண்காடு வழியாக தர்மத்துப்பட்டியை அடைந்து கிளைப்பாதையில் 1 கி.மீ. செல்லவும். மயிலாடுதுறை – பூம்புகார் சாலையில் உள்ளது.

45. திருத்தலைச்சங்காடு

சங்கரவனேசுவரர் – சௌந்திரநாயகி – புரசுமரம் – சங்கு தீர்த்தம் – சம்பந்தர் பாடிய ஸ்தலம் – மயிலாடுதுறையிலிருந்து ஆக்கூர் வழியாக பூம்புகார் செல்லும் பாதையில் 17 கி.மீ. சீர்காழி – வேளாங்கண்ணி பாதையில் வரலாம்.

46. திருஆக்கூர்

தான்தோன்றியப்பர் – வாள்நெடுங்கண்ணி – குமுததீர்த்தம் – சம்பந்தரும் அப்பரும் பாடிய ஸ்தலம் – மயிலாடுதுறை – பொறையாறு சாலையில் 15 கி.மீ. சீர்காழியிலிருந்தும் வரலாம்.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

47. திருக்கடவூர் வீரட்டம்

அமிர்தகடேசுவரர் – அபிராமி – பிஞ்சிலம் செடி – சிவகங்கை, அமிர்த தீர்த்தங்கள் – மூவர் பாடிய ஸ்தலம் – மார்க்கண்டேயருக்காக சிவபெருமான் எமனை உதைத்தருளிய ஸ்தலம் – காலசம்ஹார மூர்த்தி – அபிராமி சிறப்புடையவர்கள். இங்கு நவக்கிரஹம் இல்லை. மயிலாடு துறையிலிருந்து 20 கி.மீ. சீர்காழியிலிருந்து 18 கி.மீ.

48. திருக்கடவூர் மயானம்

பிரமபுரீசுரவர் – மலர்க்குழல் மின்னம்மை – காசி தீர்த்தம் – மூவர் பாடிய ஸ்தலம் – வள்ளி, தெய்வானையுடன் வேலவர் வில்லேந்திய கோலம் உள்ளது – திருக்கடவூரிலிருந்து 2 கி.மீ.

49. திருவேட்டக்குடி

திருமேனி அழகர் – சாந்தநாயகி – புன்னைமரம் – தேவ தீர்த்தம் – சம்பந்தர் பாடிய ஸ்தலம் – காரைக்கால் – பொறையாறு சாலையில் வேட்டக்குடி ஸ்டாப்பில் இறங்கி 1 கி.மீ. நடக்கவும்.

50. திருத்தெளிச்சேரி (கோயில்பத்து)

பார்வதி ஈசுவரர் – பார்வதி அம்மை – வன்னி, வில்வ மரங்கள் – சூரிய புஷ்கரணி முதலிய 3 தீர்த்தங்கள் – சம்பந்தர் பாடிய ஸ்தலம். காரைக்காலில் புதிய பஸ் நிலையம் அருகில்.

51. திருத்தருமபுரம்

தருமபுரீஸ்வரர் – தேனாமிர்தவல்லி – வாழைமரம் – தரும, பிரம தீர்த்தங்கள் – சம்பந்தர் பாடிய ஸ்தலம் – உத்திராடம் நட்சத்திரத்தில் பிறந்தவர்கள் இங்குள்ள தட்சிணாமூர்த்தி – துர்க்கையை வழிபட நலம் பெருகும். காரைக்கால் – திருநள்ளாறு பாதையில் செபஸ்தியார் கோவில் ஸ்டாப்பில் இறங்கி 2 கி.மீ. போகவும். மயிலாடுதுறை காரைக்கால் செல்லும் வழியாக வரலாம்.

52. திருநள்ளாறு

தர்ப்பாரண்யேசுவரர் – போகமார்த்த பூண்மலையாள் – தர்ப்பை (புல்) – நள தீர்த்தம் – மூவர் பாடிய ஸ்தலம் – சனிபகவான் பரிகாரத்தலம் –

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

இங்கு நவக்கிரஹம் இல்லை. கும்பகோணம் காரைக்கால் சாலையில் 50-வது கி.மீ-ல் திருநள்ளாறு. நாகப்பட்டினம், மயிலாடுதுறையிலிருந்தும் 30 கி.மீ. வரலாம். ரேவதி நட்சத்திரத்தில் பிறந்தவர்கள் இங்குள்ள சனீஸ்வரனை வணங்கிட நலம் பெருகும். சனி பகவான் தலம்.

53. திருக்கோட்டாறு (திருக்கொட்டாரம்)

ஜராவதேசுவரர் – வண்டமார் பூங்குழலி – பாரிஜாத மரம் – சூரிய தீர்த்தம் – சம்பந்தர் பாடிய ஸ்தலம் – கொல்லுமாங்குடி – நெடுங்காடு சாலையில் உள்ளது. திருநள்ளாறு – பேரளம் பாதையில் அம்பகரத்தூரில் இறங்கி 3 கி.மீ. செல்லவும்.

54. திருஅம்பர் (பெருந்திருக்கோயில்)

பிரமபுரீசுவர் – பூங்குழலி – புன்னைமரம் – பிரம தீர்த்தம் – சம்பந்தர் பாடிய ஸ்தலம் – மயிலாடுதுறை – திருவாரூர் சாலையில் பூந்தோட்டம் சென்று, அங்கிருந்து கிளைப்பாதையில் 5 கி.மீ. 4-வது கி.மீ-ல் கோயில் திருமாளம்.

55. திருஅம்பர் மாகாளம்

மாகாளேஸ்வரர் – பயகூயநாயகி – மாகாள தீர்த்தம் – கருங்காலி மரம் – சம்பந்தர் பாடிய ஸ்தலம். மாகாளச்சித்தர் வழிபட்ட தலம். பூந்தோட்டம் காரைக்கால் சாலையில் உள்ளது.

56. திருமீயச்சூர்

மேகநாதர் – சௌந்தரநாயகி – வில்வமரம் – சூரிய தீர்த்தம் – சம்பந்தர் பாடிய ஸ்தலம்-மயிலாடுதுறை – திருவாரூர் சாலையில் பேரளம் சென்று, அங்கிருந்து கிளைப்பாதையில் 2 கி.மீ. செல்லவும். கும்பகோணம் – காரைக்கால் பாதையில் பேரளம் வந்து அப்பால் 2 கி.மீ.

57. திருமீயச்சூர் (இளங்கோயில்)

சகலபுவனேசுவரர் – மேகலாம்பிகை – அப்பர் பாடிய ஸ்தலம் – நான்கு முகத்துடன் சண்டேசுவர் மூர்த்தம் அபூர்வமானது.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

58. திருச்செதலப்பதி

முத்தீஸ்வரர் பொற்கொடிநாயகி – மந்தாரை – சந்திர தீர்த்தம் – சம்பந்தர் பாடிய ஸ்தலம் – நரமுக விநாயகர் சந்நிதி உள்ளது. 4 யுக லிங்கம் உள்ளது. கும்பகோணம் – பூந்தோட்டம் பாதையில் கூத்தனூர் வழியாக பேரளம் அடைந்து 1 கி.மீ. போனால் கோயில்பத்தில் ஆலயம்.

59. திருப்பாம்புரம்

பாம்புரேஸ்வரர் – வண்டார்குழலி – வன்னி மரம் – ஆதிசேஷ தீர்த்தம் – சம்பந்தர் பாடிய ஸ்தலம் – ராகு, கேது பரிகாரத் தலம் – கும்பகோணம் – கொல்லுமாங்குடி வழியில் கற்கத்தி ஸ்டாப்பில் இறங்கி 2 கி.மீ. தூரம் மின் பஸ்ஸில் செல்லவும்.

60. திருச்சிறுகுடி

கூட்சுமபுரீஸ்வரர் – மங்களநாயகி – வில்வமரம் – சம்பந்தர் பாடிய தலம். செவ்வாய் தோஷம் பரிகாரத் தலம் – வேற்று மதத்தவர்களும் தரிசித்து திருநீறு பெறுகிறார்கள். திருவீழிமிழலையிலிருந்து 3 கி.மீ. சைக்கிளில் (அ) நடந்து செல்லவும்.

61. திருவீழிமிழலை

வீழிமிழலைநாதர் – அழகுமுலை அம்மை – வீழிச்செடி – விஷ்ணுதீர்த்தம் முதலிய 25 தீர்த்தங்கள் – தங்க விமானம் – வெளவால் நெற்றி மண்டபம் வேலைப்பாடு மிக்கது – அப்பரும், சம்பந்தரும் படிக்காசு பெற்ற பலி பீடங்கள் உள்ளன. கும்பகோணத்திலிருந்து பஸ் தடம் 64ல் வரலாம். மற்ற நேரங்களில் பஸ் தடம் 4,41, 45–ல் தென்கரை வந்து, பாலம் தாண்டி 1 கி.மீ.

62. திருவன்னியூர் (அன்னியூர்)

அக்னீஸ்வரர் – கௌரி – வன்னிமரம் – அக்னி தீர்த்தம் – அப்பர் பாடிய ஸ்தலம் – கும்பகோணம் – அன்னியூர் (15 கி.மீ.) நகரப் பேருந்தில் வரலாம். திருவீழிமிழலைக்கு மேற்கில் 3 கி.மீ. கும்பகோணத்திலிருந்து தடம் 46–ல் வரலாம். கும்பகோணம் நாச்சியார்கோவில் வந்து அப்பால் 10 கி.மீ.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

63. திருக்கருவிலி (கருவேலி)

கற்குணநாதேசுவரர் – சர்வாங்கநாயகி – எம தீர்த்தம் – அப்பர் பாடிய ஸ்தலம் – கும்பகோணம் – பூந்தோட்டம் சாலையில் கூத்தனூர் வந்து அப்பால் 1 கி.மீ.

64. திருப்பேணுபெருந்துறை (திருப்பந்துறை)

சிவானந்தேஸ்வரர் – மலையரசி – வன்னிமரம் – மங்கள தீர்த்தம் – சம்பந்தர் பாடிய ஸ்தலம் – கும்பகோணத்திலிருந்து 9 கி.மீ.ல் உள்ள நாச்சியார் கோயிலை அடுத்து ஏரவாஞ்சேரி பாதையில் 3 கி.மீ.

65. திருநறையூர்ச்சித்தீச்சரம் (திருநறையூர்)

சித்தநாதேஸ்வரர் – அழகம்மை – பவள மல்லிகை – சூல தீர்த்தம் – சம்பந்தரும், சுந்தரரும் பாடிய ஸ்தலம் – கும்பகோணம் –நாச்சியார்கோயில் 9 கி.மீ. நாச்சியார் கோவில் ஊரின் முற்பகுதியில் திருநறையூர் உள்ளது.

66. திருஅரிசிற்கரைப்புத்தூர்

படிக்காசு வைத்தநாதர் – அழகாம்பிகை – வில்வமரம் – மூவர் பாடிய ஸ்தலம் – கும்பகோணம் – நாச்சியார்கோவில் சாலையில் 7 கி.மீ.

67. திருச்சிவபுரம்

சிவகுருநாதர் – சிங்காரவல்லி – சண்பகமரம் – சுந்தரதீர்த்தம் – சம்பந்தரும், அப்பரும் பாடிய ஸ்தலம் – கும்பகோணம் – மன்னார்குடி சாலையில் 5 கி.மீ.ல் உள்ள சாக்கோட்டைக்குச் சென்று, அங்கிருந்து கிளைப்பாதையில் 2 கி.மீ.

68. திருக்கலயநல்லூர் (சாக்கோட்டை)

அமிர்தகலஈஸ்வரர் – அமிர்தவல்லி – வன்னிமரம் – சுந்தரர் பாடிய ஸ்தலம் – கும்பகோணம் – மன்னார்குடி சாலையில் 5 கி.மீ.

69. திருக்கருக்குடி (மருதாநல்லூர்)

சற்குணலிங்கேஸ்வரர் – கல்யாணியம்மை – சம்பந்தர் பாடிய ஸ்தலம் – அகிலாண்டேஸ்வரம் சந்நிதி புற்று விசேஷமானது. கும்பகோணம் – மன்னார்குடி சாலையில் 5 கி.மீ.–ல் உள்ள கிளைப்பாதையில் இறங்கி 1 கி.மீ. நடக்கவும்.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

70. திருவாஞ்சியம்

வாஞ்சிநாதர் – மங்களநாயகி – சந்தனமரம் – குப்தகங்கை, எமதீர்த்தம் – மூவர் பாடிய ஸ்தலம் – எமனுக்கு தனிச்சந்நிதி உள்ளது. எமவாகனமும் உள்ளது. கும்பகோணம் – நன்னிலம் சாலையில் அச்சுதமங்கலத்தில் இறங்கி 1 கி.மீ. நடக்கவும். திருவாரூர் கும்பகோணம் சாலையில் 17 கி.மீ. குடவாசல் – நன்னிலம் சாலையில் உள்ளது.

71. திருநன்னிலம்

மதுவனேஸ்வரர் – மதுவனேஸ்வரி – வில்வமரம் – நொச்சி மரம், சக்கரகுளம், சூல தீர்த்தங்கள் – சுந்தரர் பாடிய ஸ்தலம் – கைவல்யநவநீத நூலை இயற்றிய தாண்டவராய நாராயண சுவாமியின் சமாதியும் அவரது குருவான நாராயணசுவாமியின் சமாதியும் சேர்ந்து இன்னொரு இடத்தில் இருக்கின்றன. திருவாரூரில் இருந்து 16 கி.மீ. கும்பகோணத்திலிருந்து 28 கி.மீ. மயிலாடுதுறையிலிருந்த 30 கி.மீ.

72. திருக்கொண்டீச்சரம் (திருக்கண்டீஸ்வரம்)

பசுபதீஸ்வரர் – சாந்தநாயகி – வில்வமரம் – அப்பர் பாடிய ஸ்தலம் – நன்னிலத்திலிருந்து 2 கி.மீ. மூங்கில் பாலம் கடந்தால் கோயிலை அடையலாம்.

73. திருப்பனையூர்

சௌந்தரேஸ்வரர் – பெரியநாயகி – பனைமரம் – அமிர்த புஷ்கரணி தீர்த்தம் – திருவாரூர் – மயிலாடுதுறை சாலையில் சன்னாநல்லூரைக் கடந்து பனையூர் கைகாட்டியிலிருந்து 1 கி.மீ. திருப்புகலூருக்கு 5 கி.மீ. திருவாரூர் – சன்னாநல்லூர் பாதையில் ஆண்டிப்பந்தலில் இருந்து 2 கி.மீ. நன்னிலத்துக்கு 7 கி.மீ.

74. திருவிற்குடி

வீரட்டேஸ்வரர் – ஏலவார்குழலி – துளசிச்செடி – சங்கு, சக்கர தீர்த்தங்கள் – சம்பந்தர் பாடிய ஸ்தலம் – சலந்தரனை சிவன் சங்கரித்த ஸ்தலம் – அஷ்ட வீரத்தலம் – திருவாரூர் – திருமருகல் பாதையில் திருவிற்குடி, திருப்பயத்தாங்குடி, திருச்செங்காட்டாங்குடி, திருமருகல், திருச்சீயாத்தமங்கை போகலாம்:

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

75. திருப்புகலூர்

அக்னிபுரீஸ்வரர் – கருந்தார்குழலி – புன்னைமரம் – அக்னி தீர்த்தம் – மூவர் பாடிய ஸ்தலம். திருவாரூரிலிருந்து சன்னாநல்லூர் வழி திருப்புகலூர் தோரணவாயில் வழி நடந்து போனால் ஆலயம். நன்னிலம் வழி திருப்புகலூர் – நாகப்பட்டினம் சாலையில் 6 கி.மீ.

76. திருப்புகலூர் (வர்த்த மானீச்சரம்)

வர்த்தமானலிங்கம் – மனோன்மணி – சம்பந்தர் பாடிய ஸ்தலம். இவ்வூரில் திருப்புகலூர் ஆதீன மடாலயம் உள்ளது.

77. திருஇராமநந்தீச்சரம் (திருக்கண்ணபுரம்)

இராமநதீஸ்வரர் – சரிவார்குழலி –மகிழமரம் சண்பகம் – ராம தீர்த்தம் – சம்பந்தர் பாடிய ஸ்தலம் – நன்னிலத்திலிருந்து, 8 கி.மீ.ல் உள்ள திருப்புகலூரை அடைந்து அங்கிருந்து 1 கி.மீ. செல்லவும். அப்பால் 2 கி.மீ.ல் திருச்செங்காட்டாங்குடி உள்ளது.

78. திருப்பயற்றூர் (திருப்பயத்தங்குடி)

திருப்பயற்றுநாதர் – காவியங்கண்ணி – சிலந்தி மரம் – கருணா தீர்த்தம் – அப்பர் பாடிய ஸ்தலம் – திருவாரூர் – திருமருகல் (12 கி.மீ.) பாதையில் உள்ளது.

79. திருச்செங்காட்டங்குடி

உத்திரபதீஸ்வரர் – குழலம்மை – அத்திமரம் – தீர்த்தக்குளம் முதலிய 9 தீர்த்தங்கள் – சம்பந்தரும், அப்பரும் பாடிய ஸ்தலம் – கணபதி சிவனை பூஜித்த ஸ்தலம் – திருவாரூர் – திருமருகல் சாலையில் செங்கொட்டங்குடி விளக்கு ஸ்டாப்பில் இறங்கி 2 கி.மீ. செல்லவும். நன்னிலத்திலிருந்து 10 கி.மீ.

80. திருமருகல்

மாணிக்கவண்ணார் – வண்டுவார் குழலி – வாழை மரம் – இலக்குமி மாணிக்க தீர்த்தம் – திருவாரூர் – மயிலாடுதுறை சாலையில் சன்னாநல்லூரில் இறங்கி நாகூர் சாலையில் செல்லவும். நாகப்பட்டினத்தி லிருந்தும் வரலாம்.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

81. திருச்சாத்தமங்கை (சீயாத்தமங்கை)

அயவந்தீசுவரர் – இருமலர்க்கண்ணம்மை – கொன்றை மரம் – தீர்த்தக்குளம் – சம்பந்தர் பாடிய ஸ்தலம் – திருமருகலில் இருந்து 3 கி.மீ. திருநள்ளாறிலிருந்து 8 கி.மீ.சன்னாநல்லூர் நாகூர் சாலையில் சீயாத்தமங்கை ஸ்டாப்பில் இறங்கி 1 கி.மீ. நடக்கவும். நாகப்பட்டினத்திலிருந்து வரலாம். அழுகிணிசித்தர் சமாதி அடைந்த தலம். இங்குள்ள அம்மன் பூப்பெய்தவள்.

82. திருநாகைக்காரோணம் (நாகப்பட்டினம்)

காயாரோகணேஸ்வரர் – நீலாயதாட்சி – மாமரம் – தேவ, புண்டரீக தீர்த்தங்கள் – மூவர் பாடிய ஸ்தலம் – நவக்கிரங்கள் ஒரே திசையை நோக்கியவாறு உள்ளன. கார்த்திகை நட்சத்திரத்தில் பிறந்தவர்கள் இவ்வூரில் உள்ளநாகநாதர் ஆலயத்தில் ஆதிசேடனை வழிபட நலம் பெருகும். திருவாரூர்,தஞ்சாவூர், கும்பகோணம், மயிலாடுதுறை ஊர்களிலிருந்து பேருந்தில் வரலாம்.

83. திருச்சிக்கல்

வெண்ணெய்நாதர் – வேல்நெடுங்கண்ணி – குடமல்லிகை – க்ஷீர, கயா, லட்சுமி தீர்த்தங்கள் – சம்பந்தர் பாடிய ஸ்தலம் – சிங்காரவேலர் அம்மையிடம் சூரனை சங்கரிக்க வேல் வாங்கும் காட்சி அற்புதமானது. நாகப்பட்டினம் – திருவாரூர் சாலையில் 5 கி.மீ. கட்டுமலைக்கோயில்.

84. திருக்கீழ்வேளூர் (கீவளூர்)

கேடிலியப்பர் – வனமுலைநாயகி – இலந்தை மரம் – சரவண தீர்த்தம் – சம்பந்தரும், அப்பரும் பாடிய ஸ்தலம் – அஞ்சுவட்டத்தம்மன் காளி சந்நிதி சிறப்புடையது. முருகன்சிவனை பூசித்த ஸ்தலம்.

85. திருத்தேவூர்

தேவபுரீசுவரர் – தேன்மொழி – வாழைமரம் – தேவதீர்த்தம் – சம்பந்தர் பாடிய ஸ்தலம். கீவளூரிலிருந்து கிளைப்பாதையில் 3 கி.மீ. திருவாரூர் – வலிவலம் நகரப் பேருந்தில் வரலாம். 14 கி.மீ.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

86. திருப்பள்ளிமுக்கூடல்

முக்கோணநாதர் – அஞ்சனாட்சி – முக்கூடல் தீர்த்தம் ஷோடசேது – காசி, கங்கையை விட பலமடங்கு புண்ணியம் தரும். அப்பர் பாடிய ஸ்தலம், திருவாரூரிலிருந்து 5 கி.மீ. மினிபஸ் வசதி உண்டு.

87. திருவாரூர்

வன்மீகநாதர் – கமலாம்பிகை – பாதிரிமரம் – கமலாலயம் – சங்கு, கயா, வாணி தீர்த்தங்கள், மூவர் பாடிய ஸ்தலம் – பிருதிவித்தலம் – ஹஸ்தம், சித்திரை நட்சத்திரங்களில் பிறந்தவர்கள் இங்குள்ள ராஜ துர்க்கையை வழிபட நலம் பெருகும். தஞ்சாவூரிலிருந்து 45 கி.மீ. நாகப்பட்டினத்தில் இருந்து 21 கி.மீ. மயிலாடுதுறையிலிருந்து 40 கி.மீ. கும்பகோணத்திலிருந்து 40 கி.மீ.

88. திருஆரூர் அறநெறி

அகிலாண்டேஸ்வரர் – வண்டார்குழலி – திருவாரூர் பெரிய கோயிலில் 2-ம் பிரகாரத்தில் உள்ளது. சுந்தரர் பாடியது.

89. திருவாரூர் – பரவையுண்மண்தளி

துவாய்நாதர், பஞ்சின் மெல்லடியம்மை – சுந்தரர் பாடியது. திருவாரூர் பெரிய கோயிலின் தென்மேற்கே உள்ளது.

90. திருவிளமர்

பதஞ்சலிமனோகரர் – தேன்மொழி – அக்கினி தீர்த்தம். சம்பந்தர் பாடிய ஸ்தலம் – சிறிய கோயில் – திருவாரூர் – தஞ்சை சாலையில் 3 கி.மீ.

91. திருக்கரவீரம் (கரையபுரம்)

கரவீரேசுவரர் – பிரத்தியட்சமின்னம்மை – அலரிமரம் – அனவரத தீர்த்தம் – சம்பந்தர் பாடிய ஸ்தலம் – திருவாரூர் – குடவாசல் பாதையில் கரவீரம் பெருவேளூர், திருத்தயாலங்காடு, குடவாசல் ஆகிய தலங்கள் அருகில் உள்ளன.

92. திருப்பெருவேளூர் (மணக்கால் ஐயம்பேட்டை)

பிரியாஈசுவரர் – ஏலவார்குழலி – வன்னிமரம் – சரவணப் பொய்கை – சம்பந்தரும், அப்பரும் பாடிய ஸ்தலம் – குடவாசல் – கரையபுரம் பாதையில் வெட்டாறு பாலம் தாண்டி ஊர். (12 கி.மீ.)

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

93. திருத்தலையாலங்காடு

ஆடவல்லநாதர் – உமாதேவி – அப்பர் பாடிய ஸ்தலம் – திருவாரூர் – கும்பகோணம் சாலையில் 18 கி.மீ) குடவாசல்/மணக்கால் ஐயம்பேட்டை பாதையில் உள்ளது.

94. திருக்குடவாயில் (குடவாசல்)

கோணேசுவரர் – பெரியநாயகி – வாழைமரம் – அமிர்த தீர்த்தம் – சம்பந்தர் பாடிய ஸ்தலம் – பெரிய நாயகியே துர்க்கையாக வழிபடப் பெறுவதால் தனியாக துர்க்கை இல்லை. திருவாரூர் – கும்பகோணம் பாதையில் உள்ளது. 16 கி.மீ.

95. திருவிடைவாய்

இடைவாய்நாதர், அபிராமி – சம்பந்தர்பாடியது. கொரடாச்சேரி கூத்தாநல்லூர் பேருந்து மார்க்கத்தில் உள்ளது. வழிகாட்டி உள்ளது.

96. திருச்சேறை (உடையார் கோயில்)

செந்நெறி அப்பர் – ஞானவல்லி – மாவிலங்கை மரம் – மார்க்கண்டேய தீர்த்தம் – சம்பந்தரும், அப்பரும் பாடிய ஸ்தலம் – கடன் நிவர்த்தீஸ்வரர் சன்னதி சிறப்பானது. 11 திங்கட்கிழமைகளில் அர்ச்சனை செய்துவர கடன் நிவர்த்தியாகும். கும்பகோணம் – திருவாரூர் பாதையில் 15 கி.மீ.

97. திருநாலூர் மயானம்

ஞானபரமேசுவரர் – ஞானாம்பிகை – ஞானதீர்த்தம் – சம்பந்தர் பாடிய ஸ்தலம் – திருவாரூர் – கும்பகோணம் சாலையில் உள்ள குடவாசலிலிருந்து பஞ்சநதிக்குளம் ஸ்டாப்பில் இறங்கி 1 கி.மீ. நடக்கவும். மொத்தம் 3 கி.மீ.

98. திருகடுவாய்க்கரைப்புத்தூர்(ஆண்டாங்கோயில்)

சொர்ணபுரீசுவரர் – சொர்ணாம்பிகை – வன்னிமரம் – திரிசூலகங்கை தீர்த்தம் – அப்பர் பாடிய ஸ்தலம் – குடவாசல் – வலங்கைமான் சாலையில் உள்ளது. கும்பகோணம் வலங்கைமான் வழி – திருவாரூர் சாலையில் உள்ள ஆண்டாங்கோயில் பஸ்ஸ்டாப்பில் இறங்கி 1 கி.மீ. நடக்கவும்.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

99. திருஇரும்பூளை (ஆலங்குடி)

ஆபத்சகாயேஸ்வரர் – ஏலவார்குழலி – பூளைச்செடி – புஷ்கரணி, ஞானகூபம் தீர்த்தங்கள் – சம்பந்தர் பாடிய ஸ்தலம் – குரு பரிகாரத்தலம் – இங்கு தட்சிணாமூர்த்தி தான் உற்சவர் – தட்சிணாமூர்த்திக்குத் தேர்த்திருவிழாவும் உண்டு. புனர்பூச நட்சத்திரத்தில் பிறந்தவர்கள் இங்கு உள்ள குரு தட்சிணாமூர்த்தியை வழிபடநலம் பெருகும். தஞ்சாவூர் – நீடாமங்கலம் வந்து – கும்பகோணம் சாலையில் செல்லவும். நீடாமங்கலத்திலிருந்து 6 கி.மீ. கும்பகோணம் – மன்னார்குடி சாலையில் 17 கி.மீ.

100. திருஅரதைப் பெரும்பாழி (ஹரித்துவாரமங்கலம்)

பாதாளேசுவரர் – அலங்காரவல்லி – வன்னிமரம் – பிரம்ம தீர்த்தம் – சம்பந்தர் பாடிய ஸ்தலம் தஞ்சையிலிருந்தும் (தடம் 38, 55, 59) கும்பகோணத்திலிருந்து (தடம் 21, 32) வரலாம். இத்தலத்தின் தென்பாகம் மகப்பேறு அளிக்கும் ஸ்ரீ கண்டதக்ஷிணாமூர்த்தி கோயில் உள்ளது.

101. திருஅவளிவநல்லூர்

சாட்சிநாதர் – சௌந்தரநாயகி – சந்திரதீர்த்தம் – பாதிரிமரம் – சம்பந்தரும், அப்பரும் பாடிய ஸ்தலம் – அரித்துவாரமங்கலத்திலிருந்து 3 கி.மீ. தஞ்சாவூரிலிருந்து 35, 38, 39 எண் கொண்ட பஸ்கள் இங்கு வரும். கும்பகோணம் – அம்மாபேட்டை பேருந்திலும் வரலாம்.

102. திருப்பரிதிநியமம் (பருத்தியப்பர் கோயில்)

பரிதியப்பர் – மங்களநாயகி – அரசமரம் – சூரிய, சந்திர தீர்த்தங்கள் – சம்பந்தர் பாடிய ஸ்தலம் – சூரியன் பரிகாரத்தலம் – மூலவருக்கு எதிரில் சூரியன் வழிபடும் நிலையில் உள்ளது. தஞ்சாவூர் – ஒரத்தநாடு சாலையில் உழவூர் ஸ்டாப்பில் இறங்கி 2 கி.மீ. செல்லவும். தஞ்சை பஸ் எண். 39 கோவில்வரை வரும்.

103. திருவெண்ணி (கோயில் வெண்ணி)

வெண்ணிக்கரும்பேசுவரர் – அழகிய நாயகி – நந்தியாவர்த்தமரம் – சூரிய,சந்திர தீர்த்தங்கள் – சம்பந்தரும், அப்பரும் பாடிய ஸ்தலம் – அம்பாளுக்குப் பிரார்த்தனையாக வளையல்களை வழங்கும் பழக்கம் இங்கு உள்ளது. தஞ்சாவூர் – திருவாரூர் பாதையில் "கோயில் வெண்ணி" ஸ்டாப்பில் இறங்கி 1/2 கி.மீ. நடக்கவும்.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

104. திருப்பூவனூர்

புஷ்பவனநாதர் – கற்பகவல்லி – பலாமரம் – க்ஷீரபுஷ்பகரணி, கிருஷ்ண குஷ்டஹரம் தீர்த்தங்கள் – அப்பர் பாடிய ஸ்தலம் – இங்கு சாமுண்டீஸ்வரி சந்நிதி சிறப்பு உடையது. ஞாயிறு தோறும் விஷக்கடிக்கு மந்திரித்து கயிறு தருகிறார்கள். நீடாமங்கலத்திலிருந்து (மன்னார்குடி சாலையில்) 3 கி.மீ. மன்னார்குடி அம்மாபேட்டை. மன்னார்குடி – வலங்கைமான் பேருந்துகளிலும் வரலாம்.

105. திருப்பாதாளேச்சுரம் (பாமணி)

சர்ப்பபுரீஸ்வரர் அமிர்தநாயகி – மாமரம் – நாகதீர்த்தம் – சம்பந்தர் பாடிய ஸ்தலம் மன்னார்குடியில் இருந்து 2 கி.மீ. (பஸ் வசதி குறைவு). ஆட்டோ வசதியுள்ளது.

106. திருக்களர்

பாரிஜாதவனேசுவரர் – அமுதவல்லி – பவழ மல்லி – பாரிஜாத மரம் – துர்வாச தீர்த்தம் – சம்பந்தர் பாடிய ஸ்தலம் – இங்குள்ள வேதாந்த மடத்தில் சாதுக்கள் உள்ளனர். மடத்தின் அதிபராகஇருந்து வீரசேகர ஞானதேசிக (திருக்களர் ஆண்டவர்) சுவாமிகளின் சமாதிக்கோயில் மிக அருகில் உள்ளது – மன்னார்குடி – களப்பால் (வழி: கோட்டூர்: திருப்பத்தூர்) பஸ்சில் போகலாம்.

107. திருச்சிற்றேமம் (சித்தாய்மூர்)

பொன்வைத்தநாதர் – அகிலாண்டேஸ்வரி – அத்திமரம் – சுவர்ணபுஷ்கரணி – சம்பந்தர் பாடிய ஸ்தலம் – திருத்துறைப்பூண்டி வழி ஆலத்தாம்பாடி சித்தாய்மூர் பஸ் உண்டு.

108. திருஉசாத்தானம் (கோயிலூர்)

மந்திரபுரீசுவரர் – பெரியநாயகி – மாமரம் – அனுமன், மார்க்கண்டேய, கௌதம தீர்த்தங்கள் – சம்பந்தர் பாடிய ஸ்தலம் – முத்துப்பேட்டையில் இருந்து 2 கி.மீ. மன்னார்குடி, பட்டுக்கோட்டை, வேதாரண்யம், திருத்துறைப்பூண்டி, தஞ்சாவூர் ஆகிய ஊர்களிலிருந்து முத்துப்பேட்டைக்கு வரலாம்.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

109. திருஇடும்பாவனம்

சற்குணேஸ்வரர் – மங்களவல்லி – வில்வமரம் – பிரம, அகத்திய, எமதீர்த்தங்கள் – சம்பந்தர் பாடிய ஸ்தலம் – பிதிர்முத்திதலம் – வேதாரண்யம்– முத்துப்பேட்டை சாலையில் உள்ளது. திருத்துறைப்பூண்டி தொண்டியங்காடு 16 கி.மீ. பஸ் தடம் இங்கு வரும்.

110. திருக்கடிக்குளம் (கற்பகநாதர்குளம்)

கற்பகநாதர் – அழகியநாயகி – பலாமரம் – விநாயக தீர்த்தம் – சம்பந்தர் பாடிய ஸ்தலம் – விநாயகர் அம்மையப்பனை வலம் வந்து கனி பெற்ற தலம்.

111. திருத்தண்டலை நீள் நெறி (தண்டலைச்சேரி)

நீள்நாதர் – ஞானாம்பிகை – குருந்தமரம் – சம்பந்தர் பாடிய ஸ்தலம் – திருத்துறைப்பூண்டி – திருவாரூர் சாலையில் உள்ளது. 5 கி.மீ.

112. திருக்கோட்டூர்

மேலக்கோட்டூரில் உள்ள சிவாலயம் தான் சம்பந்தரின் பாடல் பெற்றது. கொழுந்தீசுவரர் – தேனார் மொழியாள் – வன்னிமரம் – அமுதக் கிணறு முதலிய 9 தீர்த்தங்கள் – பிரதோஷ மூர்த்தி இங்கு மூல மூர்த்தியாக உள்ளார். கீழக்கோட்டூரில் உள்ள சிவாலயம் (மணியம்பலம்) கருவூர்த் தேவரின் திருவிசைப்பா பாடல்களைப் பெற்றது. மன்னார்குடி – திருத்துறைப்பூண்டி பாதையில் 11 கி.மீ.

113. திருவெண்டுறை

வெண்டுறைநாதர் – வேல்நெடுங்கண்ணி – வில்வமரம் – பிரம தீர்த்தம் – சம்பந்தர் பாடிய ஸ்தலம் – மன்னார்குடியிலிருந்து சேந்தங்குடி (அ) வீராக்கி செல்லும் நகரப் பேருந்துகளில் வரலாம். திருத்துறைப்பூண்டி – மன்னார்குடி சாலையில் வீராக்கி விலக்கு ஸ்டாப்பில் இறங்கி 1 கி.மீ. செல்லவும்.

114. திருக்கொள்ளம்புதூர் (திருக்களம்பூர்)

வில்வனேசுவரர் – அழகுநாச்சியார் – வில்வமரம் – பிரம, அகத்திய, காண்டீப தீர்த்தங்கள் – சம்பந்தர் பாடிய ஸ்தலம் – நீடாமங்கலத்திலிருந்து

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

9 கி.மீ. கொரடாச்சேரிலிருந்து 5 கி.மீ. குடவாசலிலிருந்து திருக்களம்பூர் ஸ்டாப்பில் இறங்கி 1 கி.மீ. நடக்கவும்.

115. திருப்பேரெயில் (இகைப்பேரையூர்)

ஜகதீஸ்வரர் - ஜகந்நாயகி - நாரத்தைமரம் - அக்னி தீர்த்தம் - அப்பர் பாடிய ஸ்தலம் - சிறியகோயில் திருவாரூரிலிருந்து தடம் 28, 30-ல் வெள்ளையாறு பாலம் இறங்கி 2 கி.மீ. நடந்து போனால் ஆலயம். வடபாதிமங்கலத்திலிருந்து 1 கி.மீ.

116. திருக்கொள்ளிக்காடு

அக்னீசுவரர் - பஞ்சனி; மெல்லடி அம்மை - வன்னிமரம் தீர்த்தக்குளம் - சம்பந்தர் பாடிய ஸ்தலம் - சனி பகவான் பரிகாரத்தலம் - திருவாதிரை நட்சத்திரத்தில் பிறந்தவர்கள் இங்குள்ள சனீஸ்வரரை வழிபட நலம் பெருகும். திருவாரூர் - திருத்துறைப்பூண்டி சாலையில் 14-வது கி.மீ.-ல் உள்ள திருநெல்லிக்காவல் ஸ்டாப்பில் இறங்கவும். அங்கிருந்து திருத்தங்கூர் சேர்ந்து, அப்பால் 3 கி.மீ. சென்று கொள்ளிக்காடு சேரலாம்.

117. திருத்தெங்கூர்

வெள்ளிமலைநாதர் - பெரியநாயகி - தென்னைமரம் - சிவகங்கை தீர்த்தம் - சம்பந்தர் பாடிய ஸ்தலம் - திருவாரூர் - கொள்ளிக்காடு பாதையில் திருநெல்லிக்காவல், திருத்தெங்கூர், திருக்கொள்ளிக்காடு ஆகிய 3 தலங்கள் உள்ளன.

118. திருநெல்லிக்காவல்

நெல்லிவனேஸ்வரர் - மங்களாநாயகி - நெல்லி மரம் - பிரம, சூரிய தீர்த்தங்கள் - சம்பந்தர் பாடிய ஸ்தலம் - திருவாரூரிலிருந்து (14 கி.மீ.) நகரப் பேருந்து செல்கிறது.

119. திருநாட்டியத்தான்குடி

மாணிக்கவண்ணர் - மங்களாம்பிகை - மாவிலங்கை மரம் - கரி - சூரி தீர்த்தங்கள் - சுந்தரர் பாடிய ஸ்தலம் - திருவாரூர் - திருத்துறைப்பூண்டி சாலையில் மாவூர் கூட்டுரோடு வந்து, அங்கிருந்து வடபாதி மங்கலம் செல்லும் பாதையில் சென்றால் கோயிலை அடையாலம்.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

120. திருக்காறாயில் (திருக்காரவாசல்)

கண்ணாயிரம் உடையார் – கைலாசநாயகி – பலாமரம் – பிரம, சேஷ தீர்த்தங்கள் – சம்பந்தர் பாடிய ஸ்தலம் – திருவாரூர் – திருத்துறைப்பூண்டி பாதையில் 13 கி.மீ.

121. திருக்கன்றாப்பூர் (கோயில் கண்ணாப்பூர்)

நடுத்தறி அப்பர் – மாதுமையாள் – கல்பனை மரம் – சிவகங்கை தீர்த்தம் – அப்பர் பாடிய ஸ்தலம் – திருவாரூரிலிருந்து பஸ்தடம் 5 செல்கிறது.

122. திருவலிவலம்

இருதய கமலநாதர் – வாளையங்கண்ணி – புன்னை மரம் – சங்கரர் தீர்த்தம் – மூவர் பாடிய ஸ்தலம் – திருவாரூர் வழி கீவ்ளூர் – திருத்துறைப்பூண்டி சாலை (10 கி.மீ)–ல் வரலாம். திருவாரூர் – புலிவலம், மாவூர் வழியாக வரலாம்.

123. திருக்கைச்சினம் (கச்சனம்)

கைச்சினேஸ்வரர் – வெள்ளை நாயகி – கோங்கு இலவமரம் – வச்சிர, இந்திர, அகத்திய தீர்த்தங்கள் – சம்பந்தர் பாடிய ஸ்தலம் – திருவாரூர் – வேதாரண்யம் (வழி: திருக்குவளை தடம் 18) பஸ்சில் வரலாம்.

124. திருக்கோளிலி (திருக்குவளை)

கோளிலிநாதர் – வண்டமார்பூங்குழலி – பிரமதீர்த்தம் – தேற்றாமரம் மூவர் பாடிய ஸ்தலம் – நவக்கிரஹங்கள் – ஒரே முகமாகத் தென்திசையை நோக்கி உள்ளன. திருவாரூர் எட்டுக்குடி சாலையில் 19–வது கி.மீ.ல் உள்ளது. அப்பால் 2 கி.மீ.ல் எட்டுக்குடி.

125. திருவாய்மூர்

வாய்மூர்நாதர் – பாலினுநன்மொழியம்மை – பலாமரம் – சூரிய தீர்த்தம் – சம்பந்தரும், அப்பரும் பாடிய ஸ்தலம் திருவாரூரிலிருந்து 22 கி.மீ. திருவாரூர் – வேதாரண்யம் (வழி : திருக்குவளை) பஸ்சில் வரலாம்.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

126. திருமறைக்காடு (வேதாரண்யம்)

மறைகாட்டு ஈசர் – யாழைப் பழித்த மொழி அம்மை – வன்னி மரம் – வேத தீர்த்தம் (கடல்) – மூவர் பாடிய ஸ்தலம் – நவக்கிரஹங்கள் ஒரே வரிசையில் உள்ளன. மூலவருக்குப் பின்னால் அம்மையப்பன் திருமணக்கோலம் – வேதங்களால் அடைக்கப்பட்ட கதவை அப்பரும், சம்பந்தரும் முறையே திறக்கவும், அடைக்கவும் பாடிய ஸ்தலம். திருத்துறைப்பூண்டியிலிருந்து 33 கி.மீ. நாகப்பட்டினம், மன்னார்கடி, மயிலாடுதுறை, திருவாரூர், முத்துப்பேட்டை ஆகிய ஊர்களிலிருந்து பேருந்தில் வரலாம்.

127. திருஅகத்தியான்பள்ளி

அகத்தீசுவரர் – பாகம்பிரியாள் – வன்னிமரம் அகத்தி, அக்னி தீர்த்தங்கள் – சம்பந்தர் பாடிய ஸ்தலம் – வேதாரண்யம் – கோடியக்கரை சாலையில் 2 கி.மீ.

128. திருக்கோடிக்குழகர்கோயில் (கோடியக்கரை)

அமிர்தகடேசுவர் – காடுகிழாள் நாயகி – குராமரம் – அக்னி தீர்த்தம் (கடல்) அமுதக்கிணறு – முருகன் சந்நிதி சிறப்புடையது. வேதாரண்யத்தில் இருந்து 9 கி.மீ. குழகர் கோயில் உள்ளது. அப்பால் 1 கி.மீ.–ல் கோடியக்கரை

◆◆◆◆◆◆◆◆

உ

3. மலைநாட்டுத் தலம் - 1

1. திருவிஞ்சைக்களம்

மகாதேவர் – உமையம்மை – சரக்கொன்றை மரம் – சிவகங்கை தீர்த்தம் – சுந்தரர் பாடிய ஸ்தலம் – கோவையிலிருந்து திருச்சூர் 115 கி.மீ. அங்கிருந்து கொடுங்களூர் 26 கி.மீ. அப்பால் 3 கி.மீ.–ல் திருவஞ்சைக்களம்.(கேரள மாநிலத்தில் உள்ளது)

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

உ

4. பாண்டி நாட்டுத் தலங்கள் - 14

1. திரு ஆலவாய் (மதுரை)

சொக்கநாதர் – மீனாட்சி – கடம்பமரம் – பொற்றாமரைக்குளம் – சம்பந்தர், அப்பர் பாடிய ஸ்தலம் – வெள்ளி அம்பலம் – மூலம் நட்சத்திரத்தில் பிறந்தவர்கள் இங்குள்ள ஸ்ரீ தட்சிணாமூர்த்தியை வழிபட நலம் பெருகும். திருச்சி, திண்டுக்கல், புதுக்கோட்டை ஊர்களிலிருந்து வரலாம்.

2. திரு ஆப்பனூர் (திரு ஆப்புடையார் கோயில்)

திரு ஆப்புடையார் – குரவங்கமழ் குழலி – வைகை, இடபதீர்த்தம் – சம்பந்தர் பாடிய ஸ்தலம் – மதுரை நகருக்குள் செல்லூரில் இருக்கிறது.

3. திருப்பரங்குன்றம்

பரங்கிரிநாதர் – ஆவுடைநாயகி – சரவணப் பொய்கை, லட்சுமி தீர்த்தம்–சம்பந்தரும், சுந்தரரும் பாடிய ஸ்தலம் – முருகன் தெய்வானையை மணம் புரிந்த திருக்கோலம் – ஆயில்ய நட்சத்திரத்தில் பிறந்தவர்கள் இங்குள்ள சனீஸ்வரரை வழிபட நலம் பெருகும், மதுரையிலிருந்து 6 கீ.மீ.

4. திரு ஏடகம் (திருவேடகம்)

ஏடகநாதர் – ஏலவார்குழலி – வில்வமரம் – பிரம தீர்த்தகுளம் – சம்பந்தர் பாடிய ஸ்தலம் – மதுரை வழி துவரிமான், தேனூர் to சோழவந்தான் பாதையில் 18 கி.மீ.

5. திருக் கொடுங்குன்றம் (பிரான்மலை) மலைக்கோயில்

கொடுங்குன்றநாதர் – குயிலமுதநாயகி – மங்கை பாகநாதர் – தேன்மொழி – காசி விஸ்வநாதர் – விசாலாட்சி ஆகிய மூன்று சன்னதிகள் உண்டு. பைரவர், சந்நிதிகள் விசேஷமானது. உறங்காப்புளிமரம் – தேனாழி தீர்த்தம் – சம்பந்தர் பாடிய ஸ்தலம் – மதுரை to பொன்னமராவதி சாலையில் உள்ளது. மேலூர் சிங்கம்புணரி, திருப்பத்தூர் ஊரிகளிலிருந்து வரலாம்.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

6. திருப்புத்தூர்

திருத்தளிநாதர் – சிவகாமி – சரக்கொன்றை மரம் – திருத்தளி தீர்த்தம், சிவகங்கை – சம்பந்தரும், அப்பரும் பாடிய ஸ்தலம் – யோகபைரவர் சந்நிதி விசேஷமானது. மதுரை to காரைக்குடி சாலையில் 58 கி.மீ. புதுக்கோட்டையிலிருந்தும் வரலாம்.

7. திருப்புவனவாயில்

விருத்தபுரீசுவரர் – பெரியநாயகி – சதுரக்கள்ளி, குருந்து, மகிழம், புன்னை ஆகிய 4 ஸ்தல மரங்கள் – இந்திரதீர்த்தம் முதலிய 10 தீர்த்தங்கள் – சம்பந்தரும், சுந்தரரும் பாடியது. அறந்தாங்கியில் இருந்து 45 கி.மீ. வழியில் திருப்பெருந்துறை 15 கி.மீ.ல் உள்ளது. திருவாடானையிலிருந்து 18 கி.மீ.

8. திருஇராமேஸ்வரம்

இராமநாதசுவாமி – மலைவளர் காதலி – கோயிலுக்குள்ளேயே 22 தீர்த்தங்கள் – சம்பந்தரும், அப்பரும் பாடிய ஸ்தலம் – மதுரையிலிருந்து இராமநாதபுரம் வழியாக 170 கி.மீ. ஸ்ரீராமர் சிவலிங்கப் பிரதிஷ்டை செய்து, பூஜித்த ஸ்தலம். துவாதச லிங்கத்தில் ஒன்று.

9. திரு ஆடானை (திருவாடானை)

அஜகேஸ்வரர் – சிநேகவல்லி – வில்வமரம் – 5 தீர்த்தங்கள்– சம்பந்தர் பாடிய ஸ்தலம் – மதுரையிலிருந்து 95 கி.மீ. காரைக் குடியிலிருந்து 18 கி.மீ. தூரமுள்ள தேவகோட்டைக்கு சென்று அங்கிருந்து 37 கி.மீ. காளையார் கோயிலிருந்து 32 கி.மீ.

10. திருக்கானப்பேர் (காளையார் கோயில்)

சொர்ணகாளீஸ்வரர் – சொர்ணவல்லி– சோமேஸ்வரர்– சௌந்தர நாயகி, சொக்கநாதர் – மீனாட்சி ஆகிய 3 சந்நிதிகள், 3 பள்ளியறைகள் உண்டு. யானை, மாடு முதலிய 8 தீர்த்தங்கள்–சம்பந்தர், சுந்தரர் பாடிய ஸ்தலம்–மதுரை வழி காளையார் கோவில் to சிவகங்கை பாதையில் உள்ளது. நாட்டரசன் கோட்டையிலிருந்து 9 கி.மீ.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

11. திருப்பூவனம்

புஷ்பவனேஸ்வரர் – சௌந்தரநாயகி–பலாமரம்–மூவர் பாடிய தலம். மதுரையிலிருந்து கிழக்கே 19 கி.மீ. பிதிர்முக்தித்தலம்–கயாவுக்கு நிகரான தலம்.

12. திருச்சுழியல்

திருமேனிநாதர் – துணைமாலை அம்மை – அரசு, புன்னை மரங்கள் – கவ்வைக்கடல், கோடி, குண்டாறு தீர்த்தங்கள் – சுந்தரர் பாடிய தலம் – பகவான் ரமணர் அவதாரஸ்தலம் – மதுரையிலிருந்து 48 கி.மீ. தூரமுள்ள அருப்புக்கோட்டையிலிருந்து 14 கி.மீ. விருதுநகரிலிருந்து அருப்புக்கோட்டை வந்தும் திருச்சுழிக்குச் செல்லலாம்.

13. திருக்குற்றாலம்

குற்றாலநாதர் – குழல்வாய்மொழி அம்மை – குறும் பலாமரம் – வட அருவி – சம்பந்தர் பாடிய ஸ்தலம் – மதுரை to தென்காசி 160 கி.மீ.ல் வந்து அங்கிருந்து குற்றாலம் 6 கி.மீ. திருநெல்வேலியிலிருந்தும் வரலாம். சித்திரசபை தரிசிக்கத் தக்கது.

14. திருநெல்வேலி

நெல்லையப்பர் – காந்திமதி – மூங்கில் மரம் – பொற்றாமரைக்குளம் முதலிய 3 தீர்த்தங்கள் – சம்பந்தர் பாடிய ஸ்தலம் – தாமிரசபை – மதுரையில் இருந்து 160 கி.மீ. தூத்துக்குடியிலிருந்து 45 கி.மீ.

◆◆◆◆◆◆◆◆

உ

5. துளுவநாட்டுத் தலம் - 1

1. திருக்கோகர்ணம்

மகாபலேஸ்வரர் – கோகர்ணேஸ்வரி – கோகர்ண, கோடி, பிரம தீர்த்தங்கள் – சம்பந்தரும், அப்பரும் பாடிய ஸ்தலம் – சுவாமியை நாமே தொட்டு நீராட்டி, மலர் சூட்டலாம். மங்களூர் – கார்வார் 260 கி.மீ. வந்து அப்பால் 53 கி.மீ. செல்லவும்.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

உ

6. கொங்கு நாட்டுத் தலங்கள் - 7

1. திருப்புக்கொளியூர் (அவிநாசி)

அவிநாசி ஈசுவரர் – கருணாம்பிகை – பாதிரி மரம் – காசிக்கிணறு, நாக கன்னிகை, ஐராவத தீர்த்தங்கள் – சுந்தரர் பாடிய ஸ்தலம் – பழைய புக்கொளியூர் அழிந்து விட்டது. முருகன் சந்நிதி சிறப்புடையது. கோவையிலிருந்து 35 கி.மீ. திருப்பூரிலிருந்து 10 கி.மீ. திருமுருகன் பூண்டியிலிருந்து 5 கி.மீ.

2. திருமுருகன் பூண்டி

முருகநாதேஸ்வரர் – முயங்குபூண்முலை அம்மை – பிரம, ஞான, சுப்பிரமணிய தீர்த்தங்கள் – வில்வமரம் – சுந்தர் பாடிய ஸ்தலம் – பிரம தாண்டவ நடராஜர் சந்நிதி, சண்முகநாதர் சந்நிதி சிறப்புடையன. சித்தப்பிரமை, பைத்தியம், பில்லி, சூன்யம் நீங்க வேண்டுவோர் இங்கு வந்து தங்கி நாடுவதை இன்றும் காணலாம். முருகன் பூசித்த ஸ்தலம் – அவிநாசியிலிருந்து 5 கி.மீ. திருப்பூரிலிருந்து 10 கி.மீ.

3. திருநணா (பவானி)

சங்கமேஸ்வரர் – வேதாம்பிகை – பவானி, காவிரி, அமுதநதி சங்கமம் – இலந்தை மரம் – சம்பந்தர் பாடிய ஸ்தலம் – ஈரோட்டிலிருந்து 12 கி.மீ.

4. திருக்கொடிமாடச்செங்குன்றூர் (திருச்செங்கோடு)

அர்த்தநாரீஸ்வரர் – பாகம்பிரியாள் – இலுப்பை மரம் – சம்பந்தர் பாடிய ஸ்தலம் – கருவறையில் சிவலிங்க வடிவம் இல்லாத சிவத்தலம் – வெள்ளைப் பாஷாணத்தால் ஆன அர்த்தநாரீஸ்வரர் கருவறையில் உள்ளார். அவரது திருவடியில் சுரக்கும் நீர் தீர்த்தமாக வழங்கப்படுகிறது. செங்கோட்டு வேலவர் சந்நிதி சிறப்புடையது. மலைக்கோயில் 1200 படிகள் மலைமேல் செல்ல தேவஸ்தான பேருந்து உண்டு. சதயம் நட்சத்திரத்தில் பிறந்தவர்கள் மலைக்கோயிலில் உள்ள சனீஸ்வரரை நாகராசனை வழிபட நலம் பெருகும். ஈரோட்டிலிருந்து 18 கி.மீ. நாமக்கல் இருந்து 32 கி.மீ.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

5. திருவெஞ்சமாங்கூடலூர்

விகிர்தநாதேஸ்வரர் – தேன்மொழி – குடகனாறு – சுந்தரர் பாடிய ஸ்தலம் – அமராவதி நதியுடன் அதன் கிளை நதியான சிற்றாறு கூடும் இடம் – கரூரிலிருந்து அடிக்கடி பஸ் வசதி உண்டு. 20 கி.மீ. கரூர் – திண்டுக்கல் செல்லும் 2 பேருந்துகள் இத்தலம் வழியே செல்கின்றன.

6. திருப்பாண்டிக்கொடுமுடி (கொடுமுடி)

கொடுமுடிநாதர் – பண்மொழிநாயகி – தேவ, பித்ரு தீர்த்தம் – வன்னிமரம் – மூவர்பாடிய ஸ்தலம் – முயலகன் இல்லாமல் நடராஜர் நடனம் புரியும் ஸ்தலம் – தட்சிணாமூர்த்திக்கு சடாமுடி ரிஷபம் முயலகனும் உள்ளன. மும்மூர்த்தி தலம் – அவிட்டம் நட்சத்திரத்தில் பிறந்தவர்கள் இங்குள்ள சனீஸ்வரரை, நாகராஜனை வழிபட நலம் பெருகும். ஈரோட்டிலிருந்து 35 கி.மீ. திருச்சியிலிருந்து 90 கி.மீ. கரூர் – ஈரோடு வழியில் உள்ளது. 27 கி.மீ.

7. திருக்கருவூர் (கரூர்)

பசுபதி ஈஸ்வரர் – கிருபா நாயகி – சௌந்தர்ய நாயகி – அமராவதி நதி – சம்பந்தர் பாடிய ஸ்தலம் – கருவூர்த் தேவர் சமாதிக்கோயில் உள்ளது. திருச்சியிலிருந்து 65 கி.மீ. ஈரோட்டிலிருந்தும் திண்டுக்கல்லில் இருந்தும் வரலாம். மதுரை வழி திண்டுக்கல் ஈரோடு பாதையில் 140 கி.மீ. திருச்சி கரூர் பாதையில் 74 கி.மீ.

◆◆◆◆◆◆◆◆

7. ஈழநாட்டுத் தலங்கள் - 2

1. திருக்கோணமலை

கோகர்ணேஸ்வர், மாதுமையம்மாள். சம்பந்தர் பாடிய இலங்கைத் தீவில் யாழ்ப்பாணத்திற்கு தென் கிழக்கில் உள்ளது.

2. திருக்கேதீச்சுரம்

ஸ்ரீ கேதாரேஸ்வரர், கௌரியம்மை. சம்பந்தர், சுந்தரர் பாடியது. இலங்கைத்தீவில் யாழ்ப்பாணத்திற்கு தென்கிழக்கில் உள்ளது.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

உ

8. தொண்டை நாட்டுத் தலங்கள் - 33

1. திருக்கச்சி ஏகம்பம் (பெரிய காஞ்சிபுரம்)

ஏகாம்பரநாதர் – ஏலவார்குழலி – மாமரம் – சிவங்ககை தீர்த்தம் – மூவர் பாடிய ஸ்தலம் பிருதிவி ஸ்தலம் – மணல்லிங்கம் – நவக்கிரகங்கள் தத்தமக்கு உரிய வாகனங்களில் அமர்ந்திருப்பது சிறப்பு உடையது. சென்னை, செங்கற்பட்டு, அரக்கோணம், வேலூர் முதலிய ஊர்களிலிருந்து வரலாம்.

2. திருக்கச்சிமேற்றளி (திருமேற்றளி)

திருமேற்றளிநாதர் – ஏலவார்குழலி – காஞ்சிபுரத்தில் பிள்ளையார் பாளையத்தில் இத்தலம் உள்ளது.

3. திருஓணகாந்தன் தளி

ஓணேஸ்வரர் – காந்தேஸ்வரர் – ஜயேந்திர நாதர், காமாட்சியம்மை, சுந்தர் பாடிய ஸ்தலம் – காஞ்சிபுரத்திலிருந்து அரக்கோணம் செல்லும் சாலையில் சர்வதீர்த்தம் தாண்டி பஞ்சுப்பேட்டை துணை மின்நிலையத்தை அடைந்தால், எதிரில் இத்தலம் உள்ளது. ஏகாம்பரநாதர் கோயிலுக்கு பின்புறமாக நடந்து சென்றால் இத்தலத்தை அடையலாம்.

4. திருக்கச்சிஅநேகதங்காவதம்

அனேகதங்காவதேஸ்வரர் – சுந்தரர் பாடிய ஸ்தலம் – சிறிய கோயில் – காஞ்சிபுரம் பேருந்து நிலையத்திலிருந்து புத்தேரி தெரு வழியாகச் சென்று, கயிலாசநாதர் கோவில் S.S.K.V . மேல்நிலைப் பள்ளிக்குப் பின்புறம் உள்ளது.

5. திருக்கச்சிநெறிக்காடு (திருக்காலிமேடு)

சத்தியவிரகநாதர் – பிரமராம்பிகை – காரைச்செடி – இந்திர தீர்த்தம் – சம்பந்தர் பாடிய ஸ்தலம் – காஞ்சிபுரம், ரயில்வே ரோட்டில் உள்ள தலைமை அஞ்சல் நிலையத்திற்கு எதிரில், திருக்காலிமேட்டுக்கு செல்லும் பாதையில் செல்லவும். மினிபஸ் வசதி உண்டு.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

6. திருக்குரங்கணில்முட்டம்

வாலீசுவர் – இறையார்வனை அம்மை – இலந்தை மரம் – காக்கைத் தீர்த்தம் – சம்பந்தர் பாடிய ஸ்தலம் – மிக்சிறிய கோயில் – காஞ்சிபுரம் – வந்தவாசி சாலையில் 8 கி.மீ.–ல் உள்ள தூசி என்னும் கிராமத்தில் இறங்கி, அங்கிருந்து கிளைப்பாதையில் 2 கி.மீ. செல்லவும். குரங்கு, அணில், முட்டம் (காக்கை) மூன்றும் பூஜை செய்த தலம்.

7. திருமாகறல்

மாகற ஈஸ்வரர் – திரிபுவன நாயகி எலுமிச்சை மரம் – அக்னி தீர்த்தம் – சம்பந்தர் பாடிய ஸ்தலம். காஞ்சிபுரம் வழி உத்திரமேரூர் ஓரிகை சாலையில் இத்தலம் உள்ளது. தூரம் 15 கி.மீ.

8. திருவோத்தூர் (செய்யாறு)

வேதபுரீஸ்வரர் – இளமுலைநாயகி – பனை மரம் – தீர்த்தக்கிணறு – சம்பந்தர் பாடிய ஸ்தலம் – காஞ்சிபுரத்திலிருந்து 28 கி.மீ. வந்தவாசி, திருவண்ணாமலை, போளூர், ஆரணி முதலிய ஊர்களிலிருந்து வரலாம்.

9. திருவன்பார்த்தான்பனங்காட்டூர் (திருப்பனங்காடு)

கிருபாநாதேசுவரர் – கிருபாநாயகி – சடாகங்கை தீர்த்தம் – பனைமரம் – சுந்தரர் பாடிய ஸ்தலம் – காஞ்சிபுரத்திலிருந்து பெருங்காட்டூர் செல்லும் பேருந்தில் ஏறி, திருப்பனங்காடு கூட்டு ரோட்டில் இறங்கி, 1 கி.மீ. நடக்கவும். செய்யாற்றிலிருந்தும் வரலாம்.

10. திருவல்லம் (திருவலம்)

வில்வனஈஸ்வரர் – வல்லாம்பிகை – வில்வ மரம் – கௌரி தீர்த்தம் – சம்பந்தர் பாடிய ஸ்தலம் – (ராய்) வேலூரிலிருந்து ராணிப்பேட்டை பாதையில் முத்துக்கடை பஸ் ஸ்டாப்பில் இறங்கவும். காட்பாடியிலிருந்து 9 கி.மீ. நகரப் பேருந்து உண்டு. அப்பால் 12 கி.மீ.–ல் முருகன் ஸ்தலமான வள்ளிமலை உள்ளது.

11. திருமாற்பேறு (திருமால்பூர்)

மணிகண்டேஸ்வரர் – அஞ்சலாட்சி – வில்வமரம் – சக்கர தீர்த்தம் – சம்பந்தர், அப்பர் பாடிய ஸ்தலம் – திருமால்பூர் ரயில் நிலையத்திற்கு

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

அருகில் கோயில் உள்ளது. மூலவரைப் பார்த்தவாறு திருமால் கூப்பிய கரங்களுடன் உள்ளார். காஞ்சிபுரத்திலிருந்து 18 கி.மீ. அப்பால் 3 கி.மீ.-ல் உள்ள கோவிந்தவாடி என்னும் ஊரில் உள்ள தட்சிணாமூர்த்தி கோயில் சிறப்புடையது.

12. திருஊறல் [தக்கோலம்]

ஜலநாதேஸ்வரர் – கிரிராஜகன்னிகை – நந்தி தீர்த்தம் – சம்பந்தர் பாடிய ஸ்தலம் – காஞ்சிபுரம் வழி – பேரம்பாக்கம் – திருவள்ளூர் பாதையில் இத்தலம் உள்ளது. அரக்கோணம் அருகில் உள்ளது.

13. இலம்பையங்கோட்டூர் [எலுமினியன் கோட்டூர்]

அரம்பேஸ்வரர் – கனககுஜாம்பிகை – மல்லிகைச் செடி – மல்லிகைத் தீர்த்தம் – சம்பந்தர் பாடிய ஸ்தலம் – ஸ்ரீ பெரும்புதூர் தாலுகாவில் சுங்குவார் சத்திரம் அருகில் உள்ளது. சென்னையிலிருந்து 143 எண் அரசுப் பேருந்து செல்கிறது. காஞ்சிபுரம் வழி பேரம்பாக்கம் திருவள்ளூர் பாதையில் நரசிங்கபுரம் இறங்கி நடக்கவும்.

14. திருவிற்கோலம் [கூவம்]

திரிபுராந்தகேஸ்வரர் – திரிபுராந்தநாயகி – அக்கினி தீர்த்தம் – சம்பந்தர் பாடிய ஸ்தலம் – சென்னையில் இருந்து காஞ்சிபுரம் சாலையில் சுங்குவார் சத்திரம் வந்து, அங்கிருந்து கூவம் கூட்டுரோட்டில் இறங்கி 1 கி.மீ. நடக்கவும். காஞ்சியிலிருந்து, சுங்குவார் சத்திரம் அரக்கோணம் அருகில் உள்ள கடம்பத்தூரிலிருந்து 8 கி.மீ. பேரம்பாக்கத்திலிருந்த 1 கி.மீ.

15. திருஆலங்காடு

தேவர்சிங்கப்பெருமாள் – வண்டார்குழலி – பலா, ஆலமரங்கள் – முத்தி தீர்த்தம் – சம்பந்தரும், அப்பரும் பாடிய ஸ்தலம் – இரத்தினசபை – சிவன் காளியுடன் நடனமாடிய ஸ்தலம் – அரக்கோணத்தில் இருந்தும், திருவள்ளூரிலிருந்தும் வரலாம். பரணி நட்சத்திரத்தில் பிறந்தவர்கள் இங்குள்ள காளியை வணங்கிட நலம் பெருகும்.

16. திருப்பாச்சூர்

வாசீஸ்வரர் – பசுபதிநாயகி – மூங்கில் மரம் – சோமதீர்த்தம் – சம்பந்தரும், அப்பரும் பாடிய ஸ்தலம் – பதினாறு விதமான விநாயகர்கள்

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

கொண்ட சந்நிதி சிறப்புடையது. திருவள்ளூர் – பேரம்பாக்கம் நகரப் பேருந்தில் வரலாம். திருவள்ளூர் – திருத்தணி பாதையில் 4 கி.மீ.

17. திருவெண்பாக்கம்

ஊன்றீஸ்வரர் – மின்னொளி அம்மை – சுந்தர் பாடிய ஸ்தலம் – வலக்கொம்பொடிந்த நந்தியின் அருகில் சுந்தரர் நிற்கிறார் – தற்காலத்தில் கட்டிய கோயில். திருவள்ளூரிலிருந்து நகரப் பேருந்து தடம் 41 கோயில் வரை செல்லும்.

18. திருக்கள்ளில் (திருக்கள்ளம்)

சிவானந்தேஸ்வரர் – ஆனந்தவல்லி – அமுத தீர்த்தம் – பழுதடைந்த சிறிய கோயில் – சென்னை, பிராட்வே பேருந்து நிலையத்திலிருந்து வெங்கலுக்குப் போகும் பேருந்து திருத்தண்டலம் வழியாக செல்கிறது. சென்னை, ஆவடியிலிருந்து 20 கி.மீ. உள்ள பெரிய பாளையம் அருகில்.

19. திருக்காளத்தி (காளஹஸ்தி)

காளத்தீஸ்வரர் – ஞானப்பூங்கோதை – மகிழ மரம் – பொன்முகலி ஆறு – மூவர் பாடிய ஸ்தலம் – காற்றுத் தலம் – ராகு, கேது பரிகாரத் தலம் – மூலவர் சந்நிதியில் திருநீறு வழங்கப்படுவதில்லை. காலை முதல் இரவு வரை கோயில் திறந்தே இருக்கிறது – நவக்கிரகங்கள் இல்லை – சனீஸ்வரன் மட்டும் உள்ளார். திருப்பதிலிருந்து 40 கி.மீ. சென்னையில் இருந்து 110 கி.மீ. ரேணிகுண்டாவில் இருந்து 22 கி.மீ.

20. திருவொற்றியூர் (சென்னை)

ஆதிபுரீஸ்வரர் – வடிவுடையம்மை – மகிழமரம் – பிரம தீர்த்தம் – மூவர் பாடிய ஸ்தலம் 27 நட்சத்திரங்களுக்கான சிவலிங்கங்கள் கொண்ட சன்னதி சிறப்புடையது. அவரவர்களுக்கு உரிய நட்சத்திர சிவலிங்கத்தை வழிபட நலம் பெருகும். கடற்கரைக்கு அருகில் பட்டினத்தாரின் சமாதிக் கோயிலைத் தரிசிக்கலாம். சென்னை நகரின் எல்லாப் பகுதிகளிலிருந்தும் இங்கு வர பஸ் வசதி உண்டு. ரயில் வசதியும் உண்டு.

21. திருவலிதாயம் (சென்னை – பாடி)

வலியநாதர் – தாயம்மை – பரிதிமரம் – பரத்வாஜ தீர்த்தம் – சம்பந்தர் பாடிய ஸ்தலம் – குரு பரிகாரத்தலம் – பரத்வாஜ ரிஷி பூஜித்த லிங்கம், சென்னை பாடி டி.வி.எஸ். லூகாஸ் ஸ்டாப்பில் இறங்கவும்)

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

22. வட திருமுல்லைவாயில் (சென்னை)

மாசிலாமணி ஈசுவரர் – கொடிஇடைநாயகி – முல்லைக்கொடி – சுந்தரர் பாடிய ஸ்தலம் – சிறப்புமிக்க வைஷ்ணவி சந்நிதியும் பச்சையம்மன் சந்நிதியும் உள்ளன. எருக்கன் தூண்கள் விசேஷமானவை. பூந்தமல்லி, அம்பத்தூர், பாரிமுனை, தங்கசாலையிலிருந்து பேருந்தில் வரலாம்.

23. திருவேற்காடு (சென்னை)

வேதபுரீசுவரர் – வேற்கண்ணி – வேலமரம் – வேலாயுத தீர்த்தம் – சம்பந்தர் பாடிய ஸ்தலம் – தாமரை பீடத்தில், எண்கோண வடிவில் நவக்கிரஹ சந்நிதி சிறப்புடையது – தாம்பரம், தி.நகர், பாரிமுனை, திருவான்மியூர், பூந்தமல்லியிலிருந்து பேருந்தில் வரலாம். இங்கு கருமாரியம்மன் விசேஷம்.

24. திருமயிலை (சென்னை)

கபாலீஸ்வரர் – கற்பகவல்லி – புன்னைமரம் – கோயில் எதிரில் திருக்குளம் – சம்பந்தர் பாடிய ஸ்தலம் – பங்குனி உத்திர விழா சிறப்புடையது. 63 நாயன்மார் புறப்பாடு சிறப்புடையது. சென்னையில் உள்ளது.

25. திருவான்மியூர் (சென்னை)

மருந்தீசுவரர் – சொக்கநாயகி – கோயில் எதிரில் தீர்த்தக்குளம் – வன்னிமரம் – சம்பந்தர், அப்பர் பாடிய ஸ்தலம் – இங்குள்ள விஜய கணபதி சந்நிதியில் உள்ள சோடச (16) கணபதி உருவங்கள் சிறப்புடையன. சென்னை உயர்நீதி மன்றத்தில் இருந்தும் வரலாம். மயிலாப்பூரிலிருந்து 5 கி.மீ.

26. திருக்கச்சூர் (2 கோயில்கள்)

1. கச்சூர்கோயில் – விருந்திட்ட ஈஸ்வரர் – அஞ்சனாட்சி – ஆலமரம் – ஆமை தீர்த்தம் – சுந்தரர் பாடிய தலம்.

2. மருந்தீசர் கோயில் : மருந்தீசர் – இருள் நீக்கித் தாயார் – சுந்தரர் பாடிய ஸ்தலம் – நான்கு முகங்களுடன் கூடிய சண்டேசுவரர் சிறப்புடையவர் – செங்கல்பட்டுக்கு அருகில் உள்ள சிங்கப்பெருமாள் கோயில். ஸ்ரீ பெரும்புதூர் சாலையில் 2 கி.மீ. சென்று கச்சூர் என்றும் பெயர்ப்பலகை உள்ள சாலையில் சென்றால் கோயிலை அடையலாம்.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

27. திருஇடைச்சுரம் (திருவடிசூலம்)

ஞானபுரீசுவரர் – இமயமடக்கொடி – சம்பந்தர் பாடிய ஸ்தலம் – தாமரைக்குளம் – மூவர் மரகதலிங்கம் (பச்சைக்கல்) தீபாராதனை செய்யும் போது அவ்வொளி பிரகாசிக்கிறது. செங்கல்பட்டு – திருப்பேரூர் சாலையில் 8-வது கி.மீ-ல் திருவடி சூலம் ஸ்டாப்பில் இறங்கி, கிளைப்பாதையில் 1 கி.மீ. நடக்கவும்.

28. திருக்கழுக்குன்றம்

மலைக்கோயிலில் உள்ள வேதகிரீஸ்வர் – சொக்கநாயகி – மூவர் பாடல் பெற்றது. அடிவாரத்தில் பக்தவத்சலேஸ்வரர் – திரிபுரசுந்தரி – வாழைமரம் – சங்கு தீர்த்தம் – மலை வலம் வர 4 கி.மீ. தூரம். மலையில் நாள்தோறும் உச்சிக்காலத்தில் கழுகு வந்து உணவு பெற்றுக் கொள்கிறது. செங்கல்பட்டு மாமல்லபுரம் பாதையில் 14 கி.மீ.

29. திருஅச்சிறுபாக்கம்

ஆட்சீஸ்வரர் – இளங்கிளி அம்மை – சரக்கொன்றை மரம் – சங்கு, சிம்ம தீர்த்தங்கள் – சம்பந்தர் பாடிய ஸ்தலம் – செங்கல்பட்டு – திண்டிவனம் சாலையில் உள்ளது. மதுராந்தகத்திலிருந்தும் வரலாம். மேல் மருவத்தூருக்கு 5 கி.மீ.

30. திருவக்கரை

சந்திரசேகர ஈஸ்வரர் – அமிர்தேஸ்வர் – வில்வமரம் – சந்திர, சூரிய தீர்த்தங்கள் – சம்பந்தர் பாடிய ஸ்தலம் – மூலவர், மூன்று முகங்களுடன் விளங்குகிறார். வக்கரைகாளி (வக்கிரகாளி) சன்னிதியில் பௌர்ணமி பூசை சிறப்புடையது. விழுப்புரத்திலிருந்து நகரப் பேருந்து உண்டு. பாண்டிச்சேரியிலிருந்து 17 கி.மீ. மயிலத்திலிருந்து 14 கி.மீ.

31. திருஅரசிலி (ஒழிந்தியாப்பட்டு)

அரசலீஸ்வரர் – பெரியநாயகி – அரசமரம் – வாமதேவ (அரசடி) தீர்த்தம் – சம்பந்தர் பாடிய ஸ்தலம் – திண்டிவனம் பாண்டிச்சேரி சாலையில் கிளியனூர், தைலாபுரம் தாண்டி, ஒழிந்தியாப்பட்டு விளக்கு ஸ்டாப்பில் இறங்கி 2 கி.மீ. நடக்கவும்.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

32. திருஇரும்பைமாகாளம்

மகாகாளேசுவரர் – குயில்மொழி அம்மை – புன்னை மரம் – மாகாள தீர்த்தம் – சம்பந்தர் பாடிய ஸ்தலம். பாண்டிச்சேரி – சஞ்சீவி நகர் பஸ் கோயில் வரை செல்லும். பாண்டிச்சேரி – திண்டிவனம் பாதையில் கூட்டு ரோட்டில் இறங்கி 2 கி.மீ. செல்லவும்.

33. திருக்கிளியன்னவூர்

அகத்தீஸ்வரர் – அகிலாண்டேஸ்வரி – சம்பந்தர் பாடியது. பாண்டி – திண்டிவனம் மார்க்கத்தில் உள்ளது. புதியதாய் கண்டுபிடிக்கப்பட்டது.

◆◆◆◆◆◆◆◆

உ

9. நடுநாட்டுத் தலங்கள் - 22

1. திருநெல்வாயில் அரத்துறை (திருவட்டத்துறை)

ஆனந்தீஸ்வரர் – ஆனந்தநாயகி – ஆலமரம் – நிவாநதி – மூவர் பாடிய ஸ்தலம் – தொழுவூர் வழி பெண்ணாடம் விருத்தாச்சலம் சாலையில் 20 கி.மீ.-ல் கொடிகளம் ஸ்டாப்பில் இறங்கி, கிளைப்பாதையில் 2 கி.மீ.

2. திருப்பெண்ணாகடம் (பெண்ணாடம்)

சுடர்கொழுந்து ஈஸ்வரர் – கடந்தைநாயகி – சண்பகமரம் – கயிலை, பார்வதி, இந்திர, முக்குள தீர்த்தங்கள், சம்பந்தர், அப்பர் பாடிய ஸ்தலம் – விருத்தாசலம் – திட்டக்குடி சாலையில் 17 கி.மீ. தொழுதூரிலிருந்து 15 கி.மீ.

3.திருக்கூடலையாற்றூர்

நர்த்தன வல்லபேஸ்வரர் – பராசக்தி, ஞானசக்தி – கல்லாலமரம் – வெள்ளாறும், மணி முத்தாறும் கூடுமிடம் – சுந்தரர் பாடிய ஸ்தலம் – சிதம்பரம் காவாலகுடி நகரப் பேருந்தில் வரலாம். (24 கீ.மீ) – சேத்தியாதோப்பு வழியாக வரலாம். விருத்தாச்சலத்திலிருந்து 23 கி.மீ.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

4. திருஎருக்கத்தம்புலியூர் (ராஜேந்திரபட்டணம்)

நீலகண்டேஸ்வரர் – வீரமுலையம்மாள் – வெள்ளருக்கு மரம் – நீலோற்பல தீர்த்தம் – சம்பந்தர் பாடிய ஸ்தலம் – விருத்தாச்சலம் – ஜெயங்கொண்டம் சாலையில் 10 கி.மீ. அப்பால் 6 கி.மீ.ல் ஸ்ரீ முஷ்ணம் உள்ளது.

5. திருத்தினைநகர் (தீர்த்தன கிரி)

சிவக்கொழுந்தீசர் – கருந்தடங்கண்ணி – கொன்றை மரம் – ஜாம்பவ தீர்த்தம் – சுந்தரர் பாடிய ஸ்தலம் – கடலூரிலிருந்து சிதம்பரம் – கடலூர் சாலையில் மேட்டுப்பாளையம் வழியாக தாணுறை அடைந்து 1 கி.மீ. செல்லவும்.

6. திருச்சோபுரம் (தியாகவல்லி)

மங்களபுரீஸ்வரர் – தியாகவல்லி – கொன்றை மரம் – கோயிலுக்குள் உள்ள கிணறு – சம்பந்தர் பாடிய ஸ்தலம் – கடலூர் – சிதம்பரம் சாலையில் 10 கி.மீ.ல் உள்ள ஆலப்பாகத்திலிருந்து 2 கி.மீ. கடலூரிலிருந்து அடிக்கடி நகரப்பேருந்து உண்டு.

7. திருஅதிகை (திருவதிகை)

வீரட்டேசுவரர் – திரிபுரசுந்தரி – சரக்கொன்றை மரம் – கெடிலநதி – மூவர் பாடிய ஸ்தலம் – திரிபுரனை தகனம் செய்த அஷ்டவீரத்தலம் – சுவாமி கருவறையின் நிழல் பூமியில் சாயாது. பண்ருட்டிக்கு மிக அருகில் உள்ளது.

8. திருநாவலூர்

பக்தஜனேஸ்வரர் – மனோண்மணி – நாவல்மரம் – கோமுகி தீர்த்தம் – சுந்தரர் பாடிய ஸ்தலம் – சுக்கிரனுக்கு பதிலாக அவர் வழிபட்ட சுக்கிரலிங்கம் உள்ளது. பூராடம் நட்சத்திரத்தில் பிறந்தவர்கள் இங்குள்ள தட்சிணாமூர்த்தியை வழிபட நலம் பெருகும். உளுந்தூர்ப் பேட்டையிலிருந்து கெடிலம் வழியாக செல்லலாம். பண்ரூட்டி – மடப்பட்டு.

9.திருமுதுக்குன்றம் (விருத்தாசலம்)

பழமலைநாதர் – விருத்தாம்பிகை, பாலம்பிகை – அக்னி, குபேர, சக்ர, மணிமுத்தாறு தீர்த்தங்கள் – வன்னி மரம் – மூவர் பாடிய ஸ்தலம் –

CC-0. In Public Domain. Panini Kanchi Collection.

Digitization by eGangotri-South Center

பிதிர் முக்தி தலம். விழுப்புரம், நெய்வேலி உளுந்தூர்பேட்டை, கடலூர் ஆகிய ஊர்களிலிருந்து செல்லலாம்.

10. திருநெல்வெண்ணை

வெண்ணெயப்பர் – நீலமலர்க்கண்ணி – புன்னைமரம் – தீர்த்தக்கிணறு, பெண்ணையாறு – சம்பந்தர் பாடிய ஸ்தலம் – பழுதடைந்த சிறிய கோயில் – உளுந்தூர்பேட்டையிலிருந்து அடிக்கடி நகரப் பேருந்து உண்டு. 6 கி.மீ.

11. திருக்கோயிலூர் (கீழையூர்)

வீரட்டேஸ்வரர் – சிவானந்தவல்லி – வில்வமரம் – தென்பெண்ணையாறு – சம்பந்தர், அப்பர் பாடிய ஸ்தலம் – அந்தகாசூரணை சம்காரித்த அஷ்டவீர ஸ்தலம் – சுவாமி ஞானானந்தகிரியின் தபோவனம் உள்ளது. திருவண்ணாமலையிலிருந்து 35 கி.மீ. விழுப்புரம். கள்ளக்குறிச்சி, சிதம்பரம், கடலூர், விருத்தாசலம் ஊர்களிலிருந்தும் வரலாம். அருகில் அறையணிநல்லூர் உள்ளது.

12. திருஅறையணிநல்லூர் (அரகண்டநல்லூர்)

அறையணிநாதர் – அழகிய பொன்னம்மை – பெண்ணை ஆறு – சம்பந்தர் பாடிய ஸ்தலம் – திருக்கோயிலூர் – அரகண்டநல்லூர் நகரப்பேருந்து உண்டு. திருக்கோயிலூர் சிவாலயத்திற்கு பின்னால் உள்ள பெண்ணை ஆற்றுக்கு மறுகரையில் சிறுமலை மீது கோயில் உள்ளது.

13. திருஇடையாறு

மருதீஸ்வரர் – சிற்றிடைநாயகி – சுந்தரர் பாடிய ஸ்தலம் – திருக்கோயிலூரிலிருந்து அரசூர் செல்லும் பாதையில் சித்தலிங்க மடத்தை அடுத்து இத்தலம் உள்ளது.

14. திருவெண்ணெய்நல்லூர்

அருட்டுறைநாதர் – வேற்கண்ணி – மூங்கில் மரம் – தண்ட தீர்த்தம் – சுந்தரர் பாடிய ஸ்தலம் – நவக்கிரஹங்கள் தங்களுக்குரிய வாகனங்களுடன் உள்ளனர். மெய்கண்டாரின் சமாதி வடக்கு வீதியில் உள்ளது. விழுப்புரத்திலிருந்து 18 கி.மீ. பண்ருட்டியிலிருந்து 22 கி.மீ. – திருக்கோவிலூரிலிருந்து 21 கி.மீ. அருகில் திருநாவலூர் திருமுண்டீச்சுரம் உள்ளன.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

15. திருத்துறையூர்

சிஷ்ட குருநாத ஈஸ்வரர் – சிவலோகநாயகி – கொன்றை மரம் – சூரிய தீர்த்தம் – சுந்தர் பாடிய ஸ்தலம். கோயிலுக்கு நேர் எதிரில், சிவஞான சித்தியார் பாடிய அருணந்தி சிவாச்சாரியாரின் சமாதிக் கோயில் உள்ளது. ஆண்டுதோறும் புரட்டாசி பூரத்தில் குருபூஜை நடைபெறுகிறது. பண்ருட்டியிலிருந்து 15 கி.மீ. விழுப்புரத்திலிருந்து 14 கி.மீ.

16. திருவடுகூர் (திருஆண்டார்கோயில்)

வடுகீஸ்வரர் – வடுவகிர்க்கண்ணி – வன்னி மரம் – வாமதேவ தீர்த்தம் – சம்பந்தர் பாடிய ஸ்தலம் – விழுப்புரம் – பாண்டிச்சேரி சாலையில் (வழி கோலியனூர்) வளவனூர் தாண்டி, சிறிது தூரம் சென்றால் இத்தலத்தை அடையலாம். பாண்டிச்சேரி – விழுப்புரம் சாலையில் 18 கி.மீ. கோயில் தொல்பொருள் இலாகா வசம் உள்ளது.

17. திருமாணிக்குழி

வாமனபுரீஸ்வரர் – அம்புஜாட்சி – கொன்றை மரம் – சுவேத தீர்த்தம் – கெடிலநதி – சம்பந்தர் பாடிய ஸ்தலம் – மூலவர் சந்நிதி எப்பொழுதும் திரை இடப்பட்டுள்ளது. அருகில் திருவஹீந்திபுரம் உள்ளது. பண்ரூட்டி பாலூர் வழி – கடலூருக்கு செல்லும் சாலையில் உள்ளது. கடலூரிலிருந்து பஸ்தடம் 14 கோயில் வாசல் வரை வரும்.

18. திருப்பாதிரிப்புலியூர் (புதுநகரம் – கடலூர்)

பாடலேஸ்வரர் – பெரியநாயகி – பாதிரி மரம் – பிரம்ம (கடல்) தீர்த்தம் – சம்பந்தரும், அப்பரும் பாடிய ஸ்தலம் – இக்கோயிலில் பள்ளியறை அம்மன் சன்னதியில் இல்லாமல் சுவாமி சந்நிதியில் உள்ளது. கடலூரின் ஒரு பகுதியில் இத்தலம் உள்ளது. விழுப்புரம், திண்டிவனம்,பண்ருட்டி, பாண்டிச்சேரி முதலிய ஊர்களிலிருந்து வரலாம்.

19. திருமுண்டீச்சரம் (கிராமம்)

சிவலோகநாதர் – கானார்குழலி – முண்டக (பிரம) தீர்த்தம் – வன்னி – அப்பர் பாடிய ஸ்தலம் – விழுப்புரத்திலிருந்து நகரப்பேருந்தில் வரலாம். திருக்கோயிலூர் (வழி) திருவெண்ணெய்நல்லூர் – அரசூர் சாலையில் உள்ளது. உளுந்தூர்பேட்டை – திருவெண்ணைநல்லூர் சாலையில் உள்ளது.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

20. திருப்புறவார்பனங்காட்டூர் (பனையபுரம்)

பனங்காட்டு ஈஸ்வரர் – சதயாம்பிகை – பனைமரம் – தாமரை தீர்த்தம் – சுந்தரர் பாடிய ஸ்தலம் – விழுப்புரம் (வழி) திருக்கானூர் – பாண்டிச்சேரி சாலையில் உள்ளது. 9 கி.மீ.

21. திருஆமாத்தூர்

அபிராமேஸ்வரர் – முக்தாம்பிகை – வன்னிமரம் – ஆம்பல் பொய்கை – மூவர் பாடிய ஸ்தலம் – வண்ணச் சரபம் தண்டபாணி சுவாமிகளின் சமாதி இக்கோயிலுக்கு சற்றுத்தள்ளி உள்ளது. தண்டபாணி சுவாமிகளின் திருஉருவச்சிலையும், உற்சவரும், ஆறுமுகக் கடவுளும் உள்ளனர். விழுப்புரம் – சூரப்பட்டு சாலையில் உள்ளது. 10 கி.மீ.

22. திருவண்ணாமலை

அருணாசல ஈஸ்வரர் – உண்ணாமலை – மகிழமரம் – பிரமதீர்த்தம் – மூவர் பாடிய ஸ்தலம் – அக்னித்தலம் – பகவான் ரமணர் முத்தி பெற்ற ஸ்தலம் – பகவான் ரமணர் சமாதி ஆசிரமம் அதற்கு அருகில் உள்ள மகான் சேஷாத்திரி சுவாமி சமாதிக்கோயில் தரிசிக்கத்தக்கன. மலை வலம் வர 12 கி.மீ. தூரம். விழுப்புரத்திலிருந்து 60 கி.மீ. திண்டிவனத்திலிருந்து 40 கி.மீ.

உ

தரிசனம்

- இறைவனை ஆலயங்களில் தரிசித்து, மனதை அப்பெருமான் மீது பதித்தல் வேண்டும்.
- பெருமானே நற்கதி அருள்வாயாக என்று தலைமேல் கரங்களைக் கூப்பி வணங்க வேண்டும்.
- பெருமானுக்கு உரியதாகிய நல்ல வாசனையுள்ள மலர்களைச் சாத்த வேண்டும்.
- வாயாரப் பாடித் துதிக்க வேண்டும். இதுமிக அவசியமாகும். அர்ச்சனையே பாட்டாகும் என்பது சேக்கிழார் பெருமான் திருவாக்கு!

தொகுப்பு – திருக்கயிலை ஆசிரியர்

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

உ

10. வடநாட்டுத் தலங்கள் - 5

1. திருப்பருப்பதம் (ஸ்ரீசைலம்)

மல்லிகார்ச்சுனர் – பிரமராம்பிகை – மருதமரம், திரிபலா மரம் – பாலாழி, கிருஷ்ணா நதி முதலிய தீர்த்தங்கள் – மலைக்கோயில் மூவர் பாடிய ஸ்தலம் ஜோதிர்லிங்கத் தலம் – ஆந்திராவில் கர்நூல் மாவட்டத்தில் நந்தியாவில் இருந்து 96 கி.மீ.ல் உள்ளது. திருப்பதியிலிருந்து 500 கி.மீ. சென்னையிலிருந்தும் வரலாம்.

2. திருஇந்திர நீலப்பருப்பதம்

நீலாசலநாதர் – நீலாம்பிகை – இந்திர தீர்த்தம் – சம்பந்தர் பாடிய ஸ்தலம் – இமயமலைச் சாரலில் நேபாளம், காட்டுமாண்டுவிலிருந்து 15 கி.மீல் உள்ள பத்ரிநாத் கோயிலை அடைந்து, அடிவாரத்தில் தங்கி விடியற்காலை 4 மணியளவில் எழுந்து பார்க்கும் போது இம்மலை நீலநிறமாக காட்சி அளிக்கிறது. நேரம் ஆக ஆக நிறம்மாறி விடுகிறது.

3. திருஅநேகதங்காவதம் (கௌரிகுண்டம்)

மன்னேஸ்வரர் – மனோன்மணி – சம்பந்தர் பாடிய ஸ்தலம் – அம்பிகை தவம் செய்த இடம் – பனிமலையில் இங்குள்ள அதிசயமான வெந்நீர் ஊற்றில் நீராடுதல் சிறப்புடையது. புதுடில்லி அல்லது ஹரித்துவாரிலிருந்து பேருந்தில் செல்லலாம். 200 கி.மீ. தூரம்.

4. திருக்கேதாரம்

கேதாரஈஸ்வரர் – கேதாரகௌரி – சம்பந்தர் சுந்தரர் பாடிய ஸ்தலம் – மிக அருகில் ஆதிசங்கரர் கோயில் உள்ளது. ஹரித்துவாரிலிருந்து பேருந்தில் கௌரி குண்டம் சென்று அங்கிருந்து குதிரை மேலும், நடந்தும் செல்ல வேண்டும். 14 கி.மீ.

5. திருஞொடித்தான்மலை (திருக்கயிலாயம்)

பரமசிவன் – பார்வதி – மூவர் பாடிய ஸ்தலம். இம்மலை இமயமலையின் வடக்கில் திபெத் நாட்டின் மேற்கு பாகத்தில் உள்ளது. மலையின் சுற்றளவு 45 கி.மீ. இம்மலை சீன அரசின் கட்டுப்பாட்டில் இருக்கிறது.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

உ

நந்தீஸ்வரர் பெருமை

நந்திஎம் பெருமான் தன்னை
நாடொறும் வணங்கு வோர்க்குப்
புந்தியில் ஞானம் சேரும்
பொலிவுறு செல்வம் கூடும்!
சிந்தையில் அமைதி தோன்றும்
சிறப்புறு மக்கள் சேர்வர்
இந்திர போகம் கிட்டும்
இணையிலா வாழ்வு தானே!

கந்தனின் தந்தையைத் தான் சுமந்து செல்வாய்
நந்தனார் வணங்குதற்கு நடையினில் விலகி நின்றாய்
அந்தமாய்ஆதியாகி அகிலத்தைக் காக்க வந்தாய்
நந்தியேஉனைத்துதித்தேன் நாடி வந்தெம்மைக் காப்பாய் |

ஒன்பது கோள்களுக்கும் உயரிய பலன் கொடுப்பாய்
பொன்பொருள் குவியவைப்பாய் புகழையும் வளர்த்து வைப்பாய்
சிந்தனை வளம்கொடுப்பாய் சிகரத்தில் தூக்கி வைப்பாய்
நந்தியே உன்னைத்துதித்தேன் நாடி வந்தெம்மைக் காப்பாய் |

மாலைகள் ஏற்க வைப்பாய் மழலைகள் பிறக்க வைப்பாய்
வேலைகள் கிடைக்கவைப்பாய் விதியையும் மாற்றி வைப்பாய்
சோலையின் வண்ணப் பூவைச் சூடிடும் நந்தி தேவா
நாளும் நான் உனைத் துதித்தேன் நாடி வந்தெம்மைக் காப்பாய் |

தஞ்சையில் பெரிய நந்தி தளிருடல் வெண்ணெய் சாத்தி
அஞ்சாத வேந்தன் நந்தி அழகிய நெகமம் நந்தி
குஞ்சர முகத்தான் தந்தை குந்திடும் ரிஷப நந்தி
தஞ்சமென்று உனையடைந்தேன் தயங்காது எமைக் காப்பாய் |

சிவனாரை என்றைக்கும் சுமக்கும் நந்தி
சேவித்த பக்தர்களைக் காக்கும் நந்தி

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

கவலைகளை எந்நாளும் போக்கும் நந்தி
கயிலையிலே நடம்புரியும் கனிந்த நந்தி |

பள்ளியறைப் பக்கத்தில் இருக்கும் நந்தி
பார்வதியின் சொல்கேட்டுச் சிரிக்கும் நந்தி
நல்லதொரு ரகசியத்தைக் காக்கும் நந்தி
நாள்தோறும் தண்ணீரில் குளிக்கும் நந்தி |

செங்கரும்பு உணவு மாலை அணியும் நந்தி
சிவனுக்கே உறுதுணையாய் விளங்கும் நந்தி
மங்களங்கள் அனைத்தையும் கொடுக்கும் நந்தி
மனிதர்களின் துயர் போக்க வந்த நந்தி |

அருகம்புல் மாலையை அணியும் நந்தி
அரியதொரு வில்வமே ஏற்ற நந்தி
வருங் காலம் நலமாக வைக்கும் நந்தி
வணங்குகிறோம் எமைக்காக்க வருக நந்தி |

பிரதோஷ காலத்தில் பேசும் நந்தி
பேரருளை மாந்தருக்கு வழங்கும் நந்தி
வரலாறு படைத்து வரும் வல்ல நந்தி
வறுமையினை எந்நாளும் அகற்றும் நந்தி |

கெட்ட கனா அத்தனையும் மாற்றும் நந்தி
கீர்த்தியுடன் குலம் காக்கும் இனிய நந்தி
வெற்றிபெற வாய்ப்பளிக்க உதவும் நந்தி
விதியினைத்தான் மாற்றிட விளையும் நந்தி |

வேந்தன் நகர் நெய்யினிலே குளிக்கும் நந்தி
வியக்க வைக்கும் தஞ்சாவூர்ப் பெரிய நந்தி
சேர்ந்த திருப்புன்கூரிலே சாய்ந்த நந்தி
செவி சாய்த்து அருள் கொடுக்கும் செல்வ நந்தி |

கும்பிட்ட பக்தர் துயர்நீக்கும் நந்தி
குடம் குடமாய் அபிஷேகம் பார்த்த நந்தி
பொன் பொருளை வழங்கிடவே வந்த நந்தி
புகழ்குவிக்க எம் இல்லம் வருக நந்தி |

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

உ

பைரவர்



பைரவர் என்ற சொல் பரணம், ரமணம், வமனம் என்ற சொற்களின் முதல் எழுத்து, உலகை காப்பது, உலக ஸ்ருஷ்டியை விளையாட்டாக கொண்டிருப்பது. இவ்வுலகத்தை வெளியிடுவது என்று பெயர். வீர செயல்களை செய்வதற்காக சிவன் ஏற்ற திருக்கோங்களில் பைரவர் வடிவம் உள்ளது.. உயிர்கள் செய்த வினைகளை நீக்கி அருள் செய்வர். பைரவர், வீரபத்திரர், ருத்திரர், சரபமூர்த்தி, சிவன்கோயிலின் காவல்தெய்வம்.

அகந்தை கொண்டு தவறு செய்பவர்கள் தேவர்களாகவே இருப்பினும் இறை தண்டனையில் இருந்து தப்பிக்கமுடியாது என்றும் தீய எண்ணத்துடன் பிறர்செய்யும் இடையூறுகளில் இருந்தும் நல்லவர்கள் போற்றி காப்பாற்றப் படுவார்கள் என்பதே பைரவர் திருக்கோலம் உணர்த்தும் தத்துவம்.

ஒரு சமயம் படைப்பு கடவுள் பிர்மா தன் ஆற்றல்மேல் அளவற்ற கர்வம் கொண்டு சிவனைவிடப்பெரியவர் என்று கூற, பிரம்மனின் அகந்தையை அடக்குவதற்காக ஈசன் தன் புருவ மத்தியிலிருந்து ஒரு வினோதமான மனித வடிவை படைத்தார். அவரே பைரவர். அவர் பிரம்மாவின் 5 தலைகளில் ஒன்றை இடது கைவிரல் நகத்தால் கிள்ளி எறிந்து பிர்மாவின் கர்வத்தை அடக்கினார். பிரம்மஹத்திதோஷம் நீங்க ஈசனை வேண்ட கபாலவிரதம் கொண்டு திருவலஞ்சுழி கோவிலுக்கு வரும்போது நீங்கியது.

கார்த்திகை மாதம் வரும் தேய்பிறை அஷ்டமி திதி இரவு பைரவர் ஜெயந்தி. சில கோயில்களில் ஆவணி மாதம் தேற்பிறை அஷ்டமி திதியில் ஜெயந்தி. திருப்புகலூரில் சித்திரை மாதம் முதல் வெள்ளிக்கிழமை யோக பைரவர் ஜெயந்தி கொண்டாடப்படுகிறது.

சண்டன், ருத்ரன், சோமன், கபாலி, சங்கரர், கோதண்டன், வீரன், சித்ராங்கதம் ஆக 8 பெயர்களாகும். சீர்காழி, ஆறகளூர், திருவாய்மூர், ஆவூர், திருவிசலூர், கண்டியூர், திருவையாறு, திருப்புகலூர், திருவாஞ்சியம், காசி, க்ஷேத்திரபாலபுரம், நாகை, திருவண்ணாமலை, சிவபுரம், திருநெல்வேலி ஆகியவைகள் பைரவரின் சிறப்புத்தலமாகும்!

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

உ

தட்சிணாமூர்த்தி

இறைவன் யோகியாக எழுந்தருளி உயிர்களுக்கு யோகத்தையும் அந்த யோகம் புரிவதற்குரிய ஞானத்தையும் தரும் திருவடிவம் தட்சிணாமூர்த்தி வடிவம்.

தக்ஷிணம் என்பது ஞானம். இவர் ஞானத்தின் திருவுருவம். கையில் இருக்கும் நூல் உயிர்களின் அறிவை ஒளிபெறச் செய்வது. அக்ஷமாலை தத்துவங்களைக் காட்டுவது. இவர் உபதேசிப்பது ஆத்ம வித்யாதத்துவம். காலடியில் உள்ள முயலகன் உயிர்களின் அறியாமை.

வேத வேதாந்த சாத்திரங்கள், வீணை, யோகம், ஞானம் ஆகிய 4 பிரிவுகளை கற்றுக்கொடுக்கும் ஆசிரியர் தட்சிணாமூர்த்தி. இன்னொரு பெயர் வியாக்கியானமூர்த்தி.

கட்டைவிரல் – இறைவன், சுட்டுவிரல் – ஆன்மா, மோதிரவிரல் – கன்மம், நடுவிரல் – ஆணவம், சுண்டுவிரல் – மாயை. ஆணவம், கன்மம், மாயை அகன்றால் ஆன்மா இறைவனை அடையும்!

ஆலங்குடியில் யோகதக்ஷிணாமூர்த்தி, இலம்பயங்கோட்டூரில் வீணாதர தக்ஷிணாமூர்த்தி, மயிலாடுதுறையில் மேதா தக்ஷிணாமூர்த்தி, சுருட்டப்பள்ளியில் அஸீத தக்ஷிணாமூர்த்தி, தென்குடிதிட்டையில் வர தக்ஷிணாமூர்த்தி, பட்டமங்கலத்தில் யோகபட்டாபிராம தக்ஷிணாமூர்த்தி, கோவிந்தவாடியில் ஞான தக்ஷிணாமூர்த்தி, திருவிடைமருதூரில் சக்தி தக்ஷிணாமூர்த்தி, அரித்துவாரமங்கலத்தில் ஸ்ரீகண்ட தக்ஷிணாமூர்த்தி ஆக ஒன்பது தலங்களில் வீற்றிருக்கிறார். சனந்தர், சனாதனர், சனற்குமாரர், சனகர் ஆகிய நால்வரும் சனகாதி முனிவர்களாக உபதேசம் கேட்டனர்.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

உ

திருக்கயிலை ஆசிரியர் 78ம் ஆண்டு
துவக்கவிழா நல்வாழ்த்துக்கள்

Cell:
98943 94414

Phone:
0435 - 2454464

கோவையில் நடைபெற்ற
உலக செம்மொழி மாநாட்டிற்கு அனுப்பப்பட்ட

தமிழ்த்தாய் விக்ரகம்

பஞ்சலோக விக்ரஹங்கள் செய்வதற்கு
மிகச் சிறந்த ஸ்தாபனம்

குபேரன் சிற்ப தொழிற்சாலை

11, இராஜவீதி, சுவாமிமலை - 612 302.
தஞ்சாவூர் மாவட்டம்.

ஸ்தாபகர் : செம்பொற்சிலை கலைஞர் S. கருணாநிதி ஸ்தபதி
உரிமையாளர்கள் : K. மோகன்ராஜ் & பிரதர்ஸ்

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

உ

திருக்கயிலை ஆசிரியர் 78ம் ஆண்டு
துவக்கவிழா நல்வாழ்த்துக்கள்

கைராசியான ஸ்தாபனம்!

☎ 222793

A.R.C

22 CT தங்கம் புதிய டிசைன் நகைகளுக்கு

விஸ்வநாதன் & கோ.,
ஜுவல்லர்ஸ்



உயர்தரமான தங்கம் &
வெள்ளி நகைகள்
மற்றும் வெள்ளிப் பாத்திரங்களை
மனதிற்கேற்ற வகையில்
வாங்குவதற்கு
மயிலாடுதுறை நகரில்
கைராசியான ஸ்தாபனம்!

A.R.C. விஸ்வநாதன் & கோ.,
[தங்கம் & வெள்ளி நகை வியாபாரம்]
A.R.C. பில்டிங், பட்டமங்கலத் தெரு
மயிலாடுதுறை - 609 001

ஞாயிறு ஷோரூம் உண்டு

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.